# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 545 சுபகிருது வருடம், ஆனி மாதம் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(17.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 16, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## உஷ்



அரசாங்க வங்கிகள் இரண்டிற்கு இருவரை புதியவர்களாக நியமிக்க பிரதமர் ரணில் சிபாரிசு செய்த பெயர்களுக்கு ஜனாதிபதி இதுவரை அங்கீகாரம் வழங்கவில்லையாம்.

அதேபோல காலப்போக்கில் நிதியமைச்சராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்படலாமெனவும் தகவலொன்று பரவுகிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான லடாய் தீவிரமாகும்போல் தெரிகிறது.

## கமெண்ட் கந்தர்..



அமைச்சரின் பேச்சைப் பார்க்கேக்க எரிபொருள் வரும் ஆனா வராது எண்ட வடிவேல் கதையாத்தான் இருக்குது...

# எரிபொருள் பதுக்கல் பெரும் பிரச்சினை!

## சேகரிப்பை நிறுத்தாதவரை பிரச்சினை தொடருமென்கிறார் அமைச்சர் காஞ்சன




யோ.தர்மராஜ்

"நாட்டுக்கு வந்துள்ள எரிபொருள் கப்பலே இறுதியானதல்ல. மேலும் மூன்று எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையும். அதன்படி பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய மூன்று கப்பல்கள் வரும் திகதியை நாங்கள் கணித்துள்ளோம். எனினும், அவசரப்பட்டு அத்திகதியை அறிவிக்க முடியாது" என வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். முடிந்தவரை எரிபொருளை வழங்குவதற்கே முயற்சிக்கின்றோம். ஆனால், எரிபொருள் கிடைக்கவில்லை என பாதைகளை மறிக்கவோ அல்லது எரிபொருள் தாங்கிகளை திறந்து பார்க்கவோ வேண்டாம். அவ்வாறு செய்தால் விநியோக செயற்பாடுகள் தொடர்ந்தும் தாமதிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

02 பக்கம்

## திங்கள் முதல் மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாமாம்!

### மின் பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை



யோ.தர்மராஜ்

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலுள்ள இரண்டாவது இயந்திரத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக இயந்திரம் நிறுத்தப் பட்டுள்ளதால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாம் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எரங்க குடாஹேவா தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலுள்ள இரண்டாவது இயந்திரத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக ....

02 பக்கம்

## அரச பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்திற்கும் இன்று விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு இது தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை நேற்று வெளியிட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் அரச பணியாளர்களுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



எரிபொருள் இன்மையால் பொதுப் போக்குவரத்தை நாடும் மக்கள் நேற்று பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தமது பணியிடங்களுக்கு சென்றனர். கொழும்பு - ஹொரணை வீதியில் சென்ற பஸ்ஸில் தமது உயிரைப் பணயம் வைத்து பயணிகள் செல்லும் காட்சியே இது.

## எரிபொருள் கோரி மக்கள் பொறுமையிழப்பு; வீதியிலிறங்கி போராட்டம் முன்னெடுப்பு!

யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் உரிய முறையில் எரிபொருளை விநியோகிக்குமாறு மக்கள் பொறுமையிழந்து வீதியில் இறங்கிப் போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர். சில எரிபொருள் நிலையங்களில் பாதுகாப்பு தரப்பினருடன் முறுகல்நிலை ஏற்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு வுக்காக வரிசையில் காத்திருந்து இருவர் உயிரிழந்த சம்பவமும் மக்களை...

02 பக்கம்

## ஆட்சி மாற்றத்துக்கு தேர்தலே வேண்டும்!

### சம்பந்தனின் கருத்தினை வரவேற்றார் சஜித்

02 பக்கம்

## டீசல் புதிய விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை தேவை

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்து

யோ.தர்மராஜ்

நாட்டில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும் 20 வீதமான பஸ் போக்குவரத்தை முன்னெடுப்பதாலேயே மக்கள் வேலைகள், அலுவலகங்களுக்கும் சென்றுவர முடிகின்றது. எனவே, தற்போது நாட்டுக்கு வந்துள்ள டீசல் கப்பலிலுள்ள டீசலை விநியோகிக்கும்போது, பொதுப் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள்...

02 பக்கம்

## திருமலையிலிருந்து கொழும்புக்கு டீசல் கடத்திய மூவர் கைது

02 பக்கம்

## 5 வயது சிறுவனை ஆற்றில் தள்ளிவிட்டு தானும் தற்கொலை செய்ய முயன்ற தாய்

### பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்ததாக தகவல்

வத்தளை, கதிரான பாலத்திற்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனை தள்ளிவிட்டு ஆற்றில் குதிக்க முயன்ற பெண்ணொருவரை வத்தளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஊன்றுகோலின் உதவியுடன் வந்த பெண், நேற்றுமுன்தினம் இரவு...

02 பக்கம்

## இந்திய உதவியுடனான கடைசி எரிபொருள் கப்பல் கொழும்பில்!

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட 700 மில்லியன் கடன் வசதியின்கீழ் கிடைக்கும் டீசலை ஏற்றிய இறுதிக் கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது.

அதன்மூலம் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் கிடைக்கவுள்ளது. எவ்வாறாயினும், பெற்றோல் கப்பல் வரும் திகதியை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இதுவரை உறுதியாகக் கூறவில்லை.

நேற்று வந்த கப்பலிலுள்ள டீசலை விநியோகம் செய்வதற்கு இன்னும் 03 நாட்கள் செல்லும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, எரிபொருளைப் பெறுவதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர்.

## யாழில் நீண்ட எரிபொருள் கியூ; 1000 ரூபாவுக்கே பெற்றோல்!



யாழ்.செய்தியாளர்

யாழ்ப்பாணத்தில் பெற்றோலுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து பெற்றோலைப் பெற்றுச் செல்கின்றனர்.

02 பக்கம்

## எரிபொருளுக்காக வரிசையில் நின்ற மேலுமொருவர் மரணம்

### சிலிண்டர் வாங்கச்சென்ற பெண்ணொருவரும் உயிரிழப்பு

பாணந்துறை, வெகட பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நின்ற ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். முச்சக்கரவண்டிக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த நபர் வரிசையில் நின்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக அவர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

02 பக்கம்



## அதானிக்கெதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

02 பக்கம்

# பதுளையில் மின்னல் தாக்கியதில் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

## 12 குடியிருப்புகள் பகுதியளவில் சேதம்

(ஆர். சுரேஷ்குமார்)

பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பெத்தை கெந்தகொல தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 12 குடியிருப்புகளுக்கு பகுதியளவில் சேதம்



ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்து குறித்து உரிய அதிகாரிக்கு தெரிவித்துள்ளபோதிலும் நேற்று மாலை வரை எவரும் தமது அவதானத்தை செலுத்தவில்லை என அப்பிரதேச மக்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பெத்தை கெந்தகொல தோட்டத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான மின்னல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் மாவட்ட



மின்சார சபைக்கு பொதுமக்கள் அறிவித்துள்ளனர். இதேவேளை, கடந்த மாதம் இவ்வாறான ஒரு மின்னல் தாக்கம் காரணமாக தோட்டத்தில் 20க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் உள்ள மின் உபகரணங்கள், தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, வானொலி உட்பட பொருட்கள் சேதமாகியமை குறிப்பிடத்தக்கது.

### எரிபொருள் பதுக்கல்...

வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் தொடர்பாக மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாடு உருவாகியுள்ளது. பிரதமரின் கருத்தை வைத்து சில சமூக ஊடகங்கள் மக்களை திசைத்திருப்பும் வகையில், எங்களுக்கு இறுதி எரிபொருள் கப்பலே கிடைத்துள்ளதாக பல கருத்துகளை பரப்பிவருகின்றனர். ஆனால், பிரதமர் கூறிய கருத்தும் உண்மையானது. இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கவிருந்த இறுதி எரிபொருள் கப்பலே இன்று (நேற்று) அதிகாலை நாட்டை வந்தடைந்தது.

இந்த எரிபொருள் கப்பலானது இந்திய கடன் திட்டத்தின் ஒரு பகுதியும் திறைசேரியின் தலையீட்டுடன் கிடைக்கப்பெற்ற 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அடங்கிய கப்பலாகும். தற்போது கப்பலிலுள்ள எரிபொருளின் தரத்தை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் அதிலுள்ள டீசலை தரையிறக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, நாட்டுக்கு தேவையான பெற்றோல் மற்றும் டீசலை பெற்றுக்கொள்வதற்காக மேலும் இரு புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை உபகுழு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி பெற்றோல் மற்றும் டீசலை பெற்றுக்கொள்வதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை குறித்த இரு நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ளோம்.

அதன்படி, அவர்களுக்கு தேவையான கடன் கடிதங்களை விடுவிப்பது தொடர்பாக, மக்கள் வங்கி தலைவருடன் பிரதமர் மற்றும் நானும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதன்படி, தேவையான டொலர் மற்றும் நாணயத்தை மக்கள் வங்கிக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளோம். அதன்பின்னர், கடன் கடிதங்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர், நாட்டுக்கு தேவையான பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடையும் திகதியை அறிவிக்க முடியும். அதன்படி, மூன்று கப்பல்கள் வரும் திகதியை நாங்கள் கணித்துள்ளோம். எனினும், அவசரப்பட்டு அத்திகதியை நான் அறிவிக்க விரும்பவில்லை. இறுதியில் அது தவறான கருத்தை உருவாக்கக் கூடும்.

எனினும், 9 மற்றும் 10 ஆம் திகதி நாட்டுக்கு கிடைக்க வேண்டிய எரிபொருள் கப்பலுக்கு தேவையான கடன் கடிதங்களை விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டமையினால் அத்திகதிகளில் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாது போனது. டொலர் இருந்தாலும் நாணய பிரச்சினை இருந்தமையால் இந்த நெருக்கடி ஏற்பட்டது. 9 மற்றும் 10ஆம் திகதிகளில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருந்த எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாதமையே தற்போதுள்ள நெருக்கடிக்கும் காரணமாகவுள்ளது.

ஆனால், தற்போது மக்கள் வங்கிக்கு தேவையான நிதியை நாங்கள் சேகரித்து வைத்துள்ளோம். அதன்படி, மூன்று நாட்களுக்குள் பெற்றோல் அடங்கிய ஒரு கப்பலை பெற்றுக்கொள்ளவும் ஏனைய இரு கப்பலையும் கடன் கடிதம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் 8 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அதேபோன்று, விமான எரிபொருளுக்காகவும் வேறொரு நிறுவனத்துடன் ஒப்பந்தமாகியுள்ளதுடன், மசகு எண்ணெய் தொடர்பாகவும் வேறொரு தரப்புடன் ஒப்பந்தமாகியுள்ளோம்.

மசகு எண்ணெயை களஞ்சியப்படுத்தினால் சுத்திகரிப்பின் ஊடாக தற்போதுள்ள உற்பத்தியைவிட அதிகரிக்க முடியும். அடுத்த கப்பல் வரும் வரை மசகு எண்ணெய் சுத்திகரிப்பை குறைந்த மட்டத்திலேயே முன்னெடுத்துச் செல்கின்றோம்.

இந்திய கடன்திட்டத்தினால் வரும் கப்பலின் திகதியை உரிய முறையில் அறிவிக்க முடியும். ஆனால், புதிய நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கலை முன்னெடுப்பதால் உரிய திகதியை அறிவிக்க முடியாது.

**எரிபொருள் கேசரிப்பு**

ஒரு கப்பலின் எரிபொருள் 10 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை முன்னெடுத்தால் இது ஒன்று அல்லது இரு நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். ஆனால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மையால் இரண்டு மூன்று நாட்களுக்கு மாத்திரமல்ல ஒரு வாரத்துக்கு அல்லது ஒரு மாதத்திற்கு தேவையான எரிபொருளை சேகரிக்க ஆரம்பித்தால், இந்த வரிசையை எப்போதும் முடிவுக்கு கொண்டுவர முடியாது.

நாங்கள் விநியோகிக்கும் எரிபொருள் நிலையங்களாக 380 நிலையங்கள் இருந்தாலும் சில சில குறைபாடுகளால் 320 நிலையங்களுக்கே விநியோகிக்க முடிந்தது. இனி அவற்றையும் நிவர்த்தி செய்துகொள்வோம்.

ஒரு எரிபொருள் கொள்வனவில் உயர்ந்தபட்சம் 220 பேருக்கு மாத்திரமே எரிபொருளை வழங்க முடியும். ஆனால், தற்போது எரிபொருள் நிலையங்களில் 2 ஆயிரம் வரையான வாகனங்கள் நிற்கின்றன. எனவே, ஒரு நாளில் அனைத்து எரிபொருள் நிலையங்களையும் ஒரே எரிபொருள் நிலையத்தை இரு முறை நிரப்புவதற்கு முடியாது. இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, முடிந்தவரை எரிபொருளை வழங்குவதற்கே முயற்சிக்கின்றோம். ஆனால், இன்று எரிபொருள் கிடைக்கவில்லை என பாதைகளை மறிக்கவோ அல்லது எரிபொருள் தாங்கிகளை திறந்து பார்க்கவோ வேண்டாம். அவ்வாறு செய்தால் விநியோக செயற்பாடுகள் தொடர்ந்தும் தாமதிக்கும்.

மார்ச் மாதத்திலிருந்து கொண்டுவரப்பட்ட எரிபொருள் கையிருப்பை விட அதிகமான கையிருப்பு, பல இடங்களிலும் பல நபர்களிடமும் இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

**மின்வெட்டு பிரச்சினை**

நாட்டில் மின்வெட்டு பிரச்சினை இருக்கும் போது, மத வழிபாடுகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சில இடங்களில் தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதாக, தேவையற்ற விதத்தில் மின்சார அலங்காரங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அதேபோன்று, சில நிறுவனங்கள், தொழிற்சாலைகளிலும் இரவு நேரங்களிலும் மின்சார பாவனையில் கவனம் செலுத்தாதிருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. எனவே, மின்வெட்டு பிரச்சினை இருக்கும் போது, மக்களும் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

**மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கும்**

மண்ணெண்ணெயின் விலை குறைவு என்பதால், சில பஸ்கள் முழுமையாக மண்ணெண்ணெயை பயன்படுத்துகின்றன. ஆனால், டீசல் விலை அதிகரித்தவுடன் பஸ் கட்டணத்தையும் அதிகரித்துள்ளனர். மண்ணெண்ணெய் தேவையுள்ள மக்களுக்கு கிடைக்காத பட்சத்தில் விலையை அதிகரிக்குமாறு மக்களே கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே, மீனவர்கள், விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு உரிய முறையில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கான திட்டங்களை முன்னெடுப்பதோடு, விலை மாற்றத்தையும் முன்னெடுக்க வேண்டிவரும்.

**எரிபொருள் விலை அதிகரிப்பு**

வாரத்துக்கு அல்லது நான்கு வாரங்களுக்கு ஒருமுறை எரிபொருள் விலை மாற்றம் இடம்பெறலாம் என அறிவித்திருந்தோம். அதன்படி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ஓ.சி நிறுவனம் கோரிக்கைவிடுத்திருந்தால் விலை சூத்திரத்திற்கு அமைய விலை மாற்றத்தை உரிய குழு முன்னெடுக்கும்.

நிதியமைச்சரின் அனுமதி மாத்திரமே கிடைக்க வேண்டும் என்பதால் தேவையான நேரத்தில் விலை மாற்றம் செய்ய வேண்டுமாயின் நிதியமைச்சரின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும்.

அவ்வாறு விலை மாற்றம் ஏற்படுமாயின் அமைச்சினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். மாறாக, போலியான செய்திகளை நம்ப வேண்டாம்.

அதேபோன்று, 2014ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுவரை மின்கட்டணத்தில் திருத்தங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, மின் கட்டணத்தை திருத்தம் செய்யுமாறு மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், மின் உற்பத்தி செலவை குறைக்கும் வகையில் திட்டத்தை முன்வைத்தால் மாத்திரமே மின் கட்டண திருத்தம் குறித்து சிந்திக்க முடியும். எனவே, உடனடியாக கட்டண திருத்தத்தை முன்னெடுக்க மாட்டோம் - என்றார்.

### அதானிக்கெதிராக...

இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியாவில் அதானி குழுமத்திற்கும் இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் இரகசிய கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

காற்றாலை மின் திட்டத்தை நேரடியாக அதானி குழுமத்திற்கு வழங்குமாறு, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தனக்கு கொடுக்குமாறு அழுத்தம் கொடுக்கிறார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்குத் தெரிவித்ததாக, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் பெர்டினாண்டோ, நாடாளுமன்றக்குழு முன்னால் கூறிய மூன்று நாட்களுக்குப் பிறகு, 2022 ஜூன் 14 அன்று பதவி விலகினார்.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் தொடர்பிலேயே இந்த கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், காற்றாலை மின் திட்டத்தை வழங்குவது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்த கருத்தை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாக மறுத்தார்.

இந்த நிலையிலேயே இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியாவில் அதானி குழுமத்திற்கும் இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் இரகசிய கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் சிட்டி முன்னால் ஆரம்பித்த பேரணி, மின்சார சபைக்கு முன் வந்த பின்னர், அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

### திருமலையிலிருந்து...

(அப்துல் ஸலாம் யாசீம்)

திருகோணமலை - மொரவெவ பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிலையத்திலிருந்து கொழும்பிற்கு லொறியொன்றில் டீசல் மற்றும் பெற்றோலை கொண்டு சென்ற மூவர் ரொட்டவெவ பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காலி, இரத்தினபுரி , கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 - 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆட்சி மாற்றத்துக்கு...

"நாட்டில் ஆட்சி மாற்றத்தைக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை வரவேற்கின்றோம் எனவும் இந்த ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் கட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தை நாம் வரவேற்கின்றோம்.

எமது கட்சியினதும் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது. தற்போதைய ஆட்சியில் சூதாட்ட அரசியல் சூடுபிடித்துள்ளது.

இது நாட்டுக்குக் கேவலமானது. அதேவேளை, இந்த ஆட்சியால் நாள்தோறும் வீதிகளில் வரிசைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அனைத்துப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பொருட்களின் விலையும் நாள்தோறும் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது. மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் எமது நாடு மீண்டெழ சர்வதேசம் கைகொடுக்கும். இந்த அராஜக ஆட்சி தொடர்ந்தால் அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது.

எனவே, ஆட்சி மாற்றம் உடன் அவசியம். ஆட்சி மாற்றம் மக்கள் ஆணையுடன் ஜனநாயக வழியில் இடம்பெற வேண்டும். அதற்காக ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்" என்றார்.

### யாழில் நீண்ட....

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி, சுன்னாகம், புலோலி மற்றும் பரமேஸ்வர சந்தி ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த புதன்கிழமை அறிவித்திருந்தது.

அதனையடுத்து, நேற்றைய தினம் அதிகாலை 4 மணி தொடக்கம் பெற்றோலை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்தனர்.

பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்றப்பட்ட பெற்றோல் நேற்று காலையே யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. அதன் பின்னரே விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்போது, அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற பெற்றோலை பகிர்ந்தளிக்கும் முகமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 1000 ரூபாவுக்கே பெற்றோலை விநியோகித்தன.

அதனால் பல மணி நேர காத்திருப்பின் பின்னரும் 2.38 லீற்றர் பெற்றோலையே பெற முடிந்துள்ளது.

### எரிபொருளுக்காக...

அவர் மயக்கமடைந்த நிலையில், அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல அம்பியூலன்ஸ் வண்டி சுமார் அரை மணி நேரம் தாமதமாக வந்ததாகவும், பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்ததாகவும் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவர் 53 வயதான ஹிரன பிரதேசத்தை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மகன் மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக அதே இடத்தில் வரிசையில் நின்ற நிலையில் பின்னர் தனது தந்தை இருந்த இடத்திற்கு வந்து மிகவும் உணர்ச்சிவசமான முறையில் நடந்து கொண்டமையும் காண முடிந்தது.

இதேவேளை, எரிவாயுவை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பூகொட பகுதியில் எரிபொருள் நிலையத்தை நோக்கி சிலிண்டரை தள்ளுவண்டியில் வைத்து தள்ளிச் சென்ற ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

எரிபொருள் நிலையத்திற்குச் செல்ல 50 மீற்றர் தூரம் இருக்கும் நிலையிலேயே இவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

எரிவாயுவை பெற்றுக்கொள்ள செல்வதாகக் கூறிச் சென்றவர் தன் கண்முன்னே கீழே விழுந்து உயிரிழந்ததாக பிரதேசவாசி ஒருவர் கண்ணீர்மல்க தெரிவித்துள்ளார்.

### எரிபொருள் கோரி...

மேலும் கோபமடையச் செய்துள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருக்கும் நிலையில் நாட்டுக்கு வரும் எரிபொருளை விநியோகிப்பதற்கு முறையான திட்டங்கள் இல்லாதமையினால் பல மணித்தியாலங்கள் மற்றும் பல நாட்களாகவும் மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

பல எரிபொருள் நிலையங்களில் விநியோகத்துக்கு முன்கூட்டியே எரிபொருள் தீர்ந்துள்ளதாகக் கூறி எரிபொருள் நிரப்பு நிலையத்தை மூடுவதற்கு முற்படுவதால், வரிசையில் காத்திருக்கும் மக்கள் ஆத்திரமடைந்து அங்குள்ள ஊழியர்களுடன் முரண்பாடுகள் மற்றும் எரிபொருள் தாங்கிகளை திறந்துபார்க்க முற்படுவதால் அங்கு கலேபரங்களும் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

இதனை தடுப்பதற்கு முற்படும் பாதுகாப்புத்தரப்புடனும் மக்கள் முரண்பட வேண்டிய நிலைமை ஏற்படுவதால், பல இடங்களில் இடைநடுவே எரிபொருள் விநியோகங்களும் நிறுத்தப்படுவதால், மக்கள் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

சில இடங்களுக்கு உரிய முறையில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு எவ்வித திட்டங்களும் இல்லாது, எரிபொருள் கையிருப்பில் இருக்கின்றதா இல்லையா என்ற உரிய அறிவிப்புகளும் இல்லாதமையினால் மக்கள் வீதிகளில் அலைக்கழியும் நிலைமை ஏற்பட்டுள்ளதாலேயே பொறுமையிழந்து வீதிகளை மறித்து போராட வேண்டியுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

நாட்டுக்கு தேவையான எரிபொருள் வருகை தருவதாகக் கூறினாலும் எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லாதமையினால், வரிசைகளும் கிலோ மீற்றர்களை தாண்டிச் செல்கின்றன. இதனால், பல நாட்கள் கடந்தும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுவதால், எரிபொருளைக் கோரி மக்கள் போராட ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, எரிவாயுவுக்காக பல நாட்கள் வரிசையில் காத்திருந்தும் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாதமையினால் எரிவாயு சிலிண்டர்களை வைத்து வீதிகளை மறித்தும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதேபோன்று, எரிபொருள் மற்றும் எரிவாயு இல்லாதமையினால் மண்ணெண்ணெக்கான கேள்விகள் அதிகரித்துள்ளதால், கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மண்ணெண்ணெக்காகவும் மக்கள் வரிசை வரிசையாக காத்திருக்கின்றனர். இதனால், பல இடங்களில் பாதைகளும் முற்றாக மூடப்பட்டு போக்குவரத்து பாதிப்புகளும் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சம்பவங்களால் நாடு பூராகவும் எரிபொருளைக்கோரி மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலையில், இந்த நிலைமை தொடர்ந்தால் நாடு பூராகவும் பாரிய போராட்டங்கள் வெடிக்கும் ஆபத்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

மேலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தற்போது அரச ஊழியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் இன்று (17) விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் இல்லை என தெரிவித்து சில எரிவாயு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

எனினும் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்று(16) அதிகாலை முதல் மக்கள் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

### டீசல் புதிய...

சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு இன்று (நேற்று) டீசல் அடங்கிய கப்பல் வருகை தந்துள்ளது. இதுவே, இந்திய கடனின் கீழ் வந்த இறுதி கப்பலாகும். இதில் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் அடங்கிய கப்பலாகும். இதில் மின் உற்பத்திக்கே அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டுக்கு வருகை தந்துள்ள கப்பலிலுள்ள டீசலை குறைந்தளவான விநியோகத்தை மேற்கொண்டால், பொதுபோக்குவரத்து மற்றும் மக்களின் தேவைகளுக்கு அமைய இரு வாரங்களுக்கு வழங்கப்படலாம். ஆனால், முழு தேவையையும் பூர்த்தி செய்யவே முடியாது.

இன்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் பெற்றோல் இல்லை என்ற அறிவிப்பே கிடைத்துள்ளது. எனவே, இனி மக்களின் இறுதி தெரிவு பொதுப் போக்குவரத்தாகவே இருக்கும். ஆனால், தற்போதுள்ள டீசலை எவ்வாறு கட்டுப்பாடுகளுடன் விநியோகிப்பது என்பது தொடர்பாக யாரும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

எனவே, தற்போது நாட்டுக்கு வருகை தந்துள்ள கப்பலிலுள்ள டீசலை விநியோகிக்கும் போது பொது போக்குவரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இன்று 20 வீதமான பஸ்களே போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இவற்றையும் நாங்கள் பாரிய நெருக்கடிக்கு மத்தியிலேயே முன்னெடுக்கின்றோம். நெருக்கடிக்கு மத்தியிலும் 20வீதமான போக்குவரத்தை முன்னெடுப்பதாலேயே மக்கள் வேலைகள், அலுவலகங்களுக்கு சென்றுவர முடிகின்றது.

இதேவேளை, தற்போதுவரை 3 ஆயிரம் வரையான பஸ்கள், ரயர்கள் இல்லாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக 18 ஆயிரம் பஸ்களில் 5 ஆயிரம் பஸ்கள் பழுதுபார்க்க முடியாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இன்று எங்களுக்கு 400 ரூபாவிற்கு டீசல் கிடைக்காவிட்டாலும் கறுப்புச் சந்தையில் 600 ரூபாவிற்கு டீசலை பெற்றுக்கொள்ள முடியுமாகவுள்ளது. சிலர் சேமித்து வைப்பதால் கறுப்பு சந்தைகள் உருவாகியுள்ளன. இதனால், இலங்கையில் எங்கும் 600 ரூபாவிற்கு தற்போதும் டீசலை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

### திங்கள் முதல்...

இயந்திரம் நிறுத்தப்பட்டுள்ளதால் 18ஆம் திகதி முதல் 300 மெகா வோர்ட் மின்சாரம் தேசிய மின்சார திட்டத்திலிருந்து குறைவடைவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு சுமார் இரு மாதங்கள் செல்லும் எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எரங்க குடாஹேவா தெரிவிக்கையில்,

இரு வருடங்களுக்கு முன்னரே இந்த பழுதுபார்த்த செயற்பாடு முன்னெடுக்கப்படவிருந்த நிலையிலும், கொரோனா தொற்று காரணமாக தேவையான உற்பத்தி பொருள் இலங்கைக்கு கொண்டுவர முடியாது போனது. இதனால், இருவருடங்களாக பழுதுபார்த்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படாது உற்பத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், உரிய காலத்தில் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த நிலையில் எங்களிடம் செப்டெம்பர் வரையே நிலக்கரியும் இருக்கின்றன. இதனால், முன்னர் இருந்ததுபோன்று, 3 மணித்தியாலம் 20 நிமிடம் மின்வெட்டையாவது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எவ்வாறாயின், திங்கட்கிழமை முதல் மின்வெட்டு நேரம் அதிகரிக்க வேண்டிவரும் - என்றார்.

### 5 வயது சிறுவனை..

குழந்தையைத் தள்ளிவிட்டு அவரும் ஆற்றில் குதிக்க முற்பட்டபோது, அதைப் பார்த்த பாதசாரிகள், அந்தப் பெண்ணை தடுத்து நிறுத்தினர்.

பின்னர் அந்தப் பெண்ணை பிரதேசவாசிகள் தாக்க முயற்சித்தனர். ஆனால் பாதுகாப்பு தரப்பினர் அதை தடுத்து நிறுத்தினர். பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண் ஹெந்தல பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆற்றில் தள்ளிவிடப்பட்ட சிறுவனை தேடும் பணிகள் நடந்து வருகின்றன.நேற்று மாலைவரை சிறுவனின் சடலம் கிடைக்கவில்லை.

இதேவேளை, சிறுவனை களனி ஆற்றில் வீசிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான பெண் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். அதன்படி குடும்ப நெருக்கடி காரணமாகவே தான் இதனை செய்துள்ளதாக சந்தேகநபர் பொலிஸாரிடம் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் குறித்த பெண்ணின் இரண்டாவது திருமணத்தில் கணவர் இறந்துவிட்டார் என்பதுடன், அவருக்கு முதல் திருமணத்தில் 15 வயது பிள்ளை உள்ளதாகவும் கூறப்படுகிறது.

42 வயதான குறித்த பெண் வத்தளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் எனவும், அவர் சில காலமாக நோயினால் அவதிப்பட்டு வருவதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மே 21முதல் 24வரை நாடாளுமன்றம் கூடவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவிப்பு

## சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து 22இல் விவாதம்



நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி மு.ப 11 மணி முதல் பி.ப 5.30 மணிவரை நடைபெறவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாடாளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், 24ஆம் திகதி தவிர ஏனைய நாட்களில் மு.ப 10 மணி முதல் மு.ப 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் மு.ப. 11 மணி முதல் 11.30 மணி வரையான நேரத்தில் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மற்றும் சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன் பின்னர் மு.ப 11.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விவாதித்து நிறைவேற்றப்படும்.

அதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி மு.ப 11 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய நாட்டில் தற்பொழுது நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன், அண்மையில் இடம்பெற்ற குழப்பமான சம்பவங்களின்போது படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரள தொடர்பான அனுதாபப் பிரேரணையின் இரண்டாவது நாள் விவாதத்துக்காக எதிர்வரும் 24ஆம் திகதி மு.ப 10 மணி முதல் பி.ப 5.30 வரையான நேரத்தை ஒதுக்குவதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# டீசல் எனக் கூறி தண்ணீரை விற்றுவிட்டு மாயமான நபர்

## பண்டாரகமவில் சம்பவம்

## 24 ஆயிரம் ரூபாவை பறிகொடுத்த பரிதாபம்





(எஸ்.எஸ். ஜயசிங்க)

எரிபொருள் வரிசையில் காத்திருந்த இருவரை ஏமாற்றி, டீசல் என தெரிவித்து, 60 லீற்றர் தண்ணீரை 3 கேன்களில் விற்ற சம்பவம் ஒன்று பண்டாரகம பகுதியில் பதிவாகியுள்ளது. குறித்த 60 லீற்றர் நீர், 24ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்தவர் சிறிய லொறியொன்றில் இளநீர் விற்கும் ஒருவர் என்றும் மற்றையவர் சிறிய லொறியொன்றின் சாரதி என்றும் தெரியவந்துள்ளது. பண்டாரகமயிலிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் குறித்த இருவரும் 5 நாட்களாக காத்திருந்த போது அருகில் இருந்த மற்றொரு நபருடன் நட்பு ஏற்பட்டுள்ளது.

பிறிதொரு இடத்தில் திருட்டுத்தனமாக எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் புதிதாக அறிமுகமான நபர் குறித்த இருவரிடமும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அந்த நபர் தெரிவித்த விடயங்களை நம்பிய இருவரும் 24ஆயிரம் ரூபாவுக்கு 3 கேன்களில் டீசல் என நினைத்து தண்ணீரை கொள்வனவு செய்து, தமது வாகனங்களுக்கு ஊற்றியபோது, அது தண்ணீர் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப் பட்டுள்ளதுடன் பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்வதற்கு தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# செங்கலடியில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் நேற்று போராட்டம்









(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு செங்கலடியில் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் எரிபொருள், எரிவாயு, உரம் வழங்கக்கோரியும் விவசாயிகள், மீனவர் கள், கால்நடைவளர்ப்பாளர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்தர் தலைமையில் செங்கலடி 'கோட்டா கோ கம' வளாகத்தில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணியானது, ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பேரணியின் பின் முச்சக்கரவண்டியின் சாரதிகளும் தமது முச்சக்கர வண்டிகளை தள்ளிச்சென்றும் பேரணிக்கு ஆதரவை தெரிவித்தனர்.

செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரதேச செயலகம் முன் அரசுக்கெதிராகவும் மற்றும் எரிபொருள், உரம் வழங்கக்கோரியும் கையில் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த செங்கலடி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி என்.பிருந்தன், ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரை தமது அலுவலகத்தில் கலந்துரையாட அழைத்திருந்தார்.

மேலும், தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியதன் பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரையும் உதவி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

## முச்சக்கரவண்டிகள் திருடிய அறுவர் கம்பளையில் கைது

(செ.தி. பெருமாள்)

முச்சக்கரவண்டிகள் திருடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த கும்பலை நாவலப்பிட்டி பொலிஸார் கம்பளையில் வைத்து கைது செய்துள்ளனர்.

நாவலப்பிட்டி கல்லோயா பிரதேசத்தில் கடந்த 9ஆம் திகதி முச்சக்கரவண்டி ஒன்று காணாமல் போனதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவின் குழுவினர் கண்காணிப்பு கெமராக்களின் ஆதாரங்களுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கம்பளை பிரதேசத்தில் வசிக்கும் 30 தொடக்கம் 40 வயதுக்குட்பட்ட ஆறு நபர்களை கைதுசெய்துள் ளனர்.

இவர்கள் நீண்ட காலமாக முச்சக்கரவண்டி களை திருடிவந்ததாக பொலிஸ் விசாரணை களில் தெரியவந்துள்ளது.

# ஹட்டனில் ஆர்ப்பாட்டப் பேரணி










(க.கிஷாந்தன், மனுர சுதத் செல்லஹேவா)

சர்வதேச வீட்டு தொழிலாளர் தினத்தை முன் னிட்டு ஹட்டனில் நேற்று (16) ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ப்ரொடெக்ட் அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி, ஹட்டன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பமானது. 300க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர். ஹட்டன் தொழில் திணைக்களத்திற்கு பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு தொழில் ஆணையாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

'வீட்டுப்பணியும் ஒரு தொழில் தான், எனவே வீட்டுப் பணியாளரையும் தொழிலாளியாக கருது' என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு, பதாதைகளையும் ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர்களின் தொழில் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட வற்றை வழங்குவதற்கான விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அதேவேளை, நாட்டில் பொருட்களின் விலை கள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருவதால் தொழிலாளர்களுக்குரிய வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வரிசை யுகத்திற்கு முடிவு கட்டப்பட வேண்டும் எனவும் போராட்டத்தின்போது வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# மலைக்குருவி கூடுகளை கடத்திய இருவர் கைது

## பதுளையில் சம்பவம்

(நடராஜா மலர்வேந்தன்)

பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட மலைக்குருவி கூடுகள் இரண்டரைக் கிலோவுடன் இருவரை பதுளுபிட்டிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன் தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போது சந்தேக நபர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

பதுளை தெய்யனேவலையில் வசிக்கும் 44 வயதுடைய மற்றும் சொரணதொட்ட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதுடைய நபர்கள் இருவரையே பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், மலைக்குருவி



கூடுகள் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் இடம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொழும்பில் நீர்வெட்டு

கொழும்பின் பல பகுதிகளுக்கு 16 மணிநேரம் நீர் விநியோகம் தடைசெய்யப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

நீர்க்குழாய்களை திருத்தும் பணிகள் காரணமாக கொழும்பில் நாளை சனிக்கிழமை (18) இரவு 11 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை (19) பிற்பகல் 03 மணி வரை 16 மணிநேர நீர்வெட்டு அமுலில் இருக்கும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு 05 மற்றும் 06 ஆகிய பகுதிகளில் நீர்விநியோகம் தடை செய்யப்படவுள்ளது.

கொழும்பு 04இல் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் செய்யப்படும்.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆசிரமத்தால் உடுகம சரஸ்வதி பாடசாலைக்கு நிதி உதவி





(நெல்லியடி நிருபர்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆசிரமத்தால் தென் மாகாணம் காலி மாவட்டத்தில் உள்ள சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

காலி மாவட்டம் - உடுகம கல்வி வலயத்தை சார்ந்த கஸ்ட பிரதேசத்தை உடைய தலங்கனாவில் அமைந்துள்ள தமிழ் மொழி பாடசாலையான சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக் கப்படும் ஆலயத்தின் பணிக்கான நிதியுதவியை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆசிரம தொண்டர்களுடன் நேரடியாக சென்று பாடசாலை அதிபரிடம் நேற்று முன்தினம் புதன்கிழமை கையளித்தார்.

சைவ சமயத்தை பின்பற்றும் சிறு தோட்ட தொழிலாளர்களுடைய பிள்ளைகளே இப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். வழிபடுவ தற்கு எந்தவித ஆலயமும் இல்லாத நிலையில், பாடசாலையில் அமைக்கப்படும் ஆலயத்திற்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டது.

ஆலயத்திற்கான மேலதிக உதவிகளையும் செய்து தருவதாகவும் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால் பாடசாலை நிர்வாகத்திடம் கூறப் பட்டது.





மஸ்கெலியா சென் ஜோசப் தேசிய கல்லூரி, புளும்பீல்ட் தேசிய கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயிலும் தரம் 06முதல் 12வரையான மாணவர்களுக்கு கொவிட் 19 இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் பொது சுகாதார மேற்பார்வை அதிகாரி பி.ஏ. பாஸ்கரன் தலைமையில் ஏற்றப்பட்டன.(செ.தி. பெருமாள்)

கடுமையான பொருளாதார நெருக்கடி இலங்கையை ஆட்டிப்படைத்து வருகிறது.

ஒருபக்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உலக அளவில் உயர்ந்து வருகின்றன. ஆனால், இங்கு பொருட்களின் விலை உயர்வுக்கப்பால் பொருட்கள் கிடைப்பதிலும் தட்டுப்பாடு நிலைமை காணப்படுகின்றது. பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உள்ளிட்ட அனைத்தினதும் விலைகள் உயர்ந்துள்ளன. ஆனால், அவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு. ஏழை, எளிய மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நகர்த்த முடியாமல் பெரும் கஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். கடந்த சில வாரங்களாக நாட்டு மக்கள் வீடுகளில் இருப்பதை விட வீதிகளில் இருக்கும் நேரம் அதிகம் என்று சொன்னால் மிகையாகாது.

உலகம் முழுவதும் பணவீக்க உயர்வின் அச்சம் ஆரம்பித்துவிட்டது. கொரோனா பாதிப்பால் சர்வதேச வர்த்தகம், சந்தைப் பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் ஏற்பட்ட சுணக்கம் விலகி மீண்டு வருவதற்குள் ரஷ்யா - உக்ரைன் போர், மசகு எண்ணெய் விலை ஏற்றம், உலோகங்களின் விலையேற்றம் உள்ளிட்டவை சந்தையில் கடும் நெருக்கடியை உருவாக்கியுள்ளன. மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு அவுஸ்திரேலியாவும், தேநீர் குடிப்பதை குறைக்குமாறு பாகிஸ்தானும் தங்கள் நாட்டு மக்களை கோரியிருப்பது இதன் தாக்கத்தினால்தான்.

கொரோனா பரவலால் பொருளாதாரத்தில் உண்டான நெருக்கடியைச் சமாளிக்க உலக நாடுகளின் மத்திய வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்தாமல் இருந்தன. ஆனால், இனியும் வட்டி விகிதத்தை உயர்த்தாமல் இருக்க முடியாது என்னும் அளவுக்குப் பணவீக்க உயர்வு தீவிரமடைந்துவிட்டது.

பெரும் பொருளாதார நாடாகக் கருதப்படும் அமெரிக்காவில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பணவீக்கம் உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வின் பாதிப்பை மக்கள் சந்தித்து வருகின்றனர். அந்நாட்டின் மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ், வட்டி விகிதம் மேலும் உயர்த்தப்படுவதற்கான சமிக்ஞைகளை தெரிவித்துள்ளது.

உலக அளவில் பாதிப்பு என்பது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 17ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மக்களின் பொறுமை சோதிக்கப்படலாமா?

அதிகமாகவே பாதித்திருக்கிறது. இப்போது வங்குரோத்து நிலையில் பாகிஸ்தானும், இலங்கையும் இருப்பது அதற்கு எடுத்துக்காட்டு. உக்ரைன் - ரஷ்யா போரைத் தொடர்ந்து, மசகு எண்ணெய் விலை அண்மையில் 138 அமெரிக்க டொலர் வரை உயர்ந்து, தற்போது சற்று குறைந்திருக்கிறது.

வருங்காலங்களிலும் பணவீக்கம் ஏறுமுகத்தில் இருக்க வாய்ப்பு இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகள் பலிக்குமா என்பது சந்தேகமே.

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்ந்து இப்படியே நீடித்து வருவது சாமானிய மக்களுக்கு நல்ல செய்தியாக இருக்காது. பொருளாதார நெருக்கடியின் தாக்கம் சமூகத்தில் ஊடுருவியுள்ளது. நேற்றும் எரிபொருள் வரிசையில் நின்ற ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிலிண்டரை பெறக் காத்திருந்த பெண்மணி ஒருவரின் உயிரும் பலியாகியுள்ளது. பொருளாதார கஷ்டங்களால் நிலைகுலைந்து போயிருந்த பெண்ணொருவர் தனது மகனை ஆற்றில் வீசியிருக்கிறார். அந்த சிறுவன் உயிரிழந்தாலும், தற்கொலை செய்ய முயற்சித்த இந்த பெண்ணை பொலிஸார் மீட்டுள்ளனர்.

புவிசார் அரசியல் நெருக்கடி ஒருபுறம், உயர்ந்துவரும் பணவீக்கம், புதி துபுதிதாக உருமாற்றம் பெறும் தொற்று பாதிப்பு ஒருபுறம் இருக்க, விலைவாசியை கட்டுக்குள் வைக்க என்ன செய்யப் போகிறது அரசு என்கிற கேள்வியை பொருளாதார வல்லுநர்கள் எழுப்புகிறார்கள். கொரோனா நோய்த்தொற்றை ஒருவழியாக எதிர்கொண்ட இலங்கை, இப்போது விலைவாசி உயர்வு, பஞ்சம் என்கிற பேரிடரை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

இந்தளவு பொருளாதார நெருக்கடியிலும் வர்த்தக முதலைகள் பொருட்களை பதுக்குகின்றன. பல இடங்களில் பொருட்கள் நினைத்த விலைக்கு விற்கப்படுகின்றன. எரிபொருள், சமையல் சிலிண்டர் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். எதுவுமே இல்லையென்ற கையறு நிலையில் மக்கள் சட்டத்தை கையில் எடுத்துவிடுவார்களோ என்ற அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளின் தவறான பொருளாதார கொள்கைகளால், பொருளாதார நிபுணர்களின் தவறான அரசியல் செயற்பாடுகளால் இலங்கை இன்று இந்த நிலைமையை சந்தித்திருக்கிறது. பொருட்களின் விலை அதிகரித்தாலும் அந்த பொருட்கள் சந்தையில் இருக்க வேண்டும்.

ஆனால், பொருட்களுக்குத் தட்டுப்பாடு வருமானால், பொருட்கள் பதுக்கப்படுமானால் இந்த நிலைமை என்றும் சீராகப்போவதில்லை. எனவே, அரசாங்கம் இதற்கான பொறிமுறையொன்றை விரைவில் அறிமுகப்படுத்தவேண்டும். இல்லையேல் மக்கள் மீண்டும் வன்முறைதான் பிரச்சினைகளுக்குத் தீர்வென நினைத்துவிடுவார்கள். அது நல்லதல்ல!

# மூத்த முற்போக்கு எழுத்தாளர் கு.சின்னப்ப பாரதி நினைவுகள்!



முருகபூபதி

*அஞ்சலிக் குறிப்புக்குள் வரும் இதர அஞ்சலிகள்*

தமிழ்நாட்டில் நாமக்கல் என்றவுடன் முன்பு எனது நினைவுக்கு வருபவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம். ஆனால், சமகாலத்தில் நினைவுகளில் தங்கியிருப்பவர் படைப்பிலக்கியவாதி கு.சின்னப்ப பாரதி.

இம்மாதம் 13 ஆம் திகதி அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தபோது, அவர் குறித்த நினைவுகள் மனதில் எழுந்தன. இறுதியாக 2013 ஆம் ஆண்டு அவரை அவரது ஊரில்தான் சந்தித்தேன். அதற்கு முன்னரும் அங்கு சென்று திரும்பி அவர் பற்றி எழுதியிருக்கின்றேன்.

அவர் வாழும்போதே அவர் பற்றி எழுதி, அதனையும் அவர் படித்திருந்தார் என்ற மனநிறைவுடன்தான் இந்த அஞ்சலிக் குறிப்பிற்குள் வருகின்றேன்.

ஒருவர் மறைந்தவுடன் எழுதுவதற்கும், உயிருடன் இருக்கும்போது எழுதுவதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன.

நாமக்கல்லில் அவரைத் தேடிச்செல்லும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் அவரது அந்த செல்லம்மாள் இல்லத்தின் வாசலில் ஒரு புதிய அனுபவத்தை எதிர்கொள்வார்கள்.

அவரைப் பார்ப்பதற்காக சொந்த வாகனத்தில் செல்லும் எவருக்கும் கிட்டாத அனுபவம் அது. நான் முதல் தடவை நாமக்கல் பஸ் நிலையத்தில் இறங்கி, அங்கே நின்ற ஓர் ஓட்டோ சாரதியிடம், அவரது பெயரைச்சொன்னதும், "ஏறுங்க" என்று மாத்திரம்தான் சொன்னார்.

அந்த இல்லத்தை நெருங்கும்போது, அந்த ஓட்டோவின் ஒலி கேட்டு விரைந்து வாசலுக்கு வந்தார் சின்னப்ப பாரதி. ஓட்டோ சாரதிக்கு நான் பணம் கொடுப்பதற்கு முன்பே அவர் கொடுத்து அனுப்பிவிட்டார்.

மற்றும் ஒரு தடவை 'யுகமாயினி' ஆசிரியர் சித்தனுடன் நான் சென்றபோதும் இதுதான் நடந்தது. இறுதியாக கரூரில் வசிக்கும் எனது உறவினரான ஆசிரியர் பொற்செல்வனுடன் அவரது காரில் சென்றிருந்தேன். அதனால், அந்தக் காட்சி இடம்பெறவில்லை.

தன்னைத்தேடி ஓட்டோவில் வரும் எவருக்கும் சின்னப்ப பாரதியே சாரதிக்குரிய பணத்தை கொடுத்துவிடுவார். அங்கு பேரம் பேசுதல் நடக்காது.

அவ்வாறு சாதாரண ஓட்டோ சாரதிகளுடனும் தோழமையை பேணியவர்தான் சின்னப்ப பாரதி.

இலங்கையில் நாம் 2011 ஜனவரியில் நடத்திய முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு எதிராக தமிழகத்திலிருந்து குரல் ஓங்காரமாகவும், அகங்காரமாகவும் ஒலித்தவேளையில், அதனை அசட்டைசெய்துவிட்டு மனசாட்சியின் குரலை ஒலித்தவாறு வந்து கலந்துகொண்டவர்தான் சின்னப்ப பாரதி.

ஈழத்து இலக்கிய உலக நண்பர்களின் அன்புக்கு பாத்திரமானவர். அவரை அவரது ஊரிலேயே சந்திப்பதற்காக சென்ற முதல் பயணத்தின்போது, இலங்கையிலிருந்து புறப்படும் தறுவாயில் அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். அந்த இல்லம் அமைந்துள்ள பிரதேசம் ரம்மியமானது. அருகே அழகிய குன்று. சில கணங்கள் அந்த இல்லத்தின் சுற்றுப்புறத்தை ரசித்தேன். ஏற்கனவே பல இலக்கியவாதிகளதும், இடதுசாரி அரசியல், தொழிற்சங்கவாதிகளினதும் கால் பதிந்த இல்லம். சின்னப்ப பாரதியின் பிரத்தியேக அறை சிறிய நூலகமாகவே காட்சி தரும். அந்த இல்லத்தின் பின்புறம் சோலையாக காய், கனிகளுடனும் உயிர்ச்சத்துகள் நிரம்பிய கீரை வகைகள் பயிரிடப்பட்ட தோட்டமாகவும் காட்சியளிக்கிறது. பல மணிநேரங்கள் சின்னப்ப பாரதியுடன் உரையாடியிருக்கிறேன். அத்துடன் அந்த இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்து அவரது குடும்பத்தினரின் அன்பான உபசரிப்பிலும் திளைத்திருக்கின்றேன்.

அவரது வாழ்வும், பணிகளும் இடதுசாரி இயக்கத்துடனும் முற்போக்கு இலக்கிய முகாமுடனும் பின்னிப் பிணைந்திருந்தன. தமிழில் அவரால் படைக்கப்பட்ட



பல படைப்புகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்திய மொழிகளில் மட்டுமன்றி ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவரது பெயரில் ஓர் அறக்கட்டளை உருவாக்கப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக விருதுகளும், பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. தமிழகத்தவர் மட்டுமன்றி, இலங்கை மற்றும் புகலிட நாடுகளைச் சேர்ந்தவர்களும் அந்த விருதுகளையும், பணப்பரிசில்களையும் பெற்றிருக்கின்றனர்.

இந்தத் தகவல்கள் சின்னப்ப பாரதியைப்பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு பழையதுதான்.

சின்னப்ப பாரதியின் "பவளாயி" நாவலை உஸ்பெக்கிஸ்தான் மொழிக்கு மொழிபெயர்த்துள்ள லோலா மக்துபா என்ற பெண்மணி உஸ்பெக்கிஸ்தானில் அமைந்துள்ள தாஸ்கண்ட் ஸ்டேட் இன்ஸ்டிடியூட் ஒஃப் ஓரியண்டல் ஸ்டடீஸ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

அவரும் நாமக்கல்லுக்கு வந்துள்ளார். டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் தமிழ் இலக்கியம் கற்றுள்ளார். சின்னப்ப பாரதியின் 'பவளாயி' நாவலை உஸ்பெக் மொழிக்குத்தந்துள்ள அவர், தான் மேலும் தமிழைக் கற்றுக்கொண்டு, உஸ்பெக் இலக்கியங்களை தமிழுக்கும், தமிழ் இலக்கியங்களை உஸ்பெக் மொழிக்கும் பெயர்ப்பதுதான் தனது இலக்கியப்பயணம் என்று தினமணிக்கதிருக்கு வழங்கியுள்ள நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

சின்னப்ப பாரதியின் 'சர்க்கரை' நாவல் இலங்கையில் சிங்கள மொழியில் அறிமுகமானது. இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளிடத்தில் பேரன்பும், அபிமானமும் கொண்டிருந்த அவர், உபாலி லீலாரத்ன முதலான சிங்கள படைப்பாளிகளிடத்திலும் அன்பும், மரியாதையும் செலுத்தியவர்.

உபாலி லீலாரத்னவும் சில வருடங்களுக்கு முன்னர் மறைந்துவிட்டார்.

சின்னப்ப பாரதி, தனது இளமைப்பருவத்து பாடசாலைக் காலத்திலிருந்து வரித்துக்கொண்ட கொள்கையிலிருந்தும் வழுவாதிருந்தவர்.

எந்தச்சூழ்நிலையிலும் எப்படிப்பட்டவர்களிடத்தும் தான் காணும் தவறுகளை எடுத்துரைக்கத் தவறாத இயல்பும், அதேவேளை தனது தவறுகளை எவரேனும் சுட்டிக்காட்டினால் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் அவரிடம் இருந்தது. அதுவே அவரது வழுவாத கொள்கை.

"படைப்பாளி என்பவன் தனது படைப்பிற்கும் மேம்பட்டவனாக விளங்கவேண்டும்" என்ற இலக்கியமேதை மக்சிம் கோர்க்கியின் சிந்தனையை உள்வாங்கியவாறு இலக்கியம் மற்றும் தான் சார்ந்துள்ள அரசியல் இயக்கத்திலும் பயணித்துக்கொண்டிருந்தவர்.

1935 இல் சாலை வசதியும், மின்சாரமும் இல்லாத, ஆனால், இயற்கை எழில்கொஞ்சும் பொன்னரிப்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர், தனது கிராமம் பற்றி தனது "என் பணியும் போராட்டமும்" என்ற நூலில் இப்படி விவரிக்கின்றார்:-

"எங்கு பார்த்தாலும் வேம்பு, வாதநாரை, ஊஞ்சை, கறுவேல், பனை, நொச்சி, பூவரசு, கொடுக்காப்புளி, மின்னல், அரளி இப்படியான மரங்கள் நீர்ப்பாசனத் தோட்டத்துக்கரைகளிலும், வெள்ளவாரிக்கரைகளிலும், புஞ்சைக்காடுகளிலும் விரிந்து பறந்து பருவங்களுக்கேற்ப இயற்கை மணத்தை பரப்பிக்கொண்டிருக்கும்."

இவரைப்போன்று இயற்கையை இப்படி நேசித்த பல படைப்பாளிகளை நாம் பார்த்திருக்கின்றோம். கலைஞர் கருணாநிதிதான் செம்மொழி அந்தஸ்துக்கு பாடுபட்டவர் என்றுதான் அந்த மாநாடு கோவையில் நடந்தபோது பலரும் பேசிக்கொண்டார்கள்.

ஆனால், பல வருடங்களுக்கு முன்பே, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டுமென்று கோரி டெல்லியில் பிரதமரை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்திருக்கிறது. அந்தத் தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர் சின்னப்பபாரதி.

அந்தப் பயணத்தின்போது உடன்வந்த இலக்கியவாதிகள், இயக்கத்தோழர்களின் வேண்டுகோளை ஏற்று பின்னாளில் தமது சுயவரலாற்றை எழுதியிருக்கிறார்.

இரண்டு பெண் பிள்ளைகளுக்குத் தந்தை. சற்று வசதியோடு வாழ்ந்தாலும் எளிமையை கடைப்பிடித்தவர்.

அவரது நூலக அறைச்சுவரில் காட்சியளித்த அவரது மருமகனின் படம் அதிர்வு கலந்த செய்திகளை சொன்னது.

மூத்த மகளின் கணவர் அவர். பெயர் இளங்கோ. ஒரு விஞ்ஞானி. பாரத ரத்னா அப்துல் கலாமுடன் பெங்களூருவில் பணியிலிருந்தவர். அங்கு ஒரு விமானத்தில் பயிற்சியிலிருந்தபோது எதிர்பாராத விபத்தினால் கொல்லப்பட்டார். அந்தச் சம்பவம் விதியின் சதிதான். பரீட்சார்த்த பயிற்சி என்பதனால் மருமகன் ஒரு பயணம் புறப்பட்டிருக்கிறார். ஆனால், ரயிலை தவறவிட்டு மீண்டும் பயிற்சி நடந்துகொண்டிருந்த விமானத் தளத்திற்கு வந்துள்ளார். அங்கு பயிற்சி தொடர்ந்துள்ளது. ஒரு விமான ஓட்டியை இறக்கிவிட்டு இவர் ஏறியுள்ளார். விமானப் பயிற்சி தொடர்ந்துள்ளது. திடீரென்று விமானம் இயந்திரக்கோளாறினால் வெடித்து சிதறியுள்ளது. அந்த விபத்தில் சின்னப்பபாரதியின் மருமகன் இளங்கோ உட்பட மூவர் கொல்லப்பட்டனர். அப்துல் கலாம் நேரில் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். சின்னப்ப பாரதியின் மகளுக்கு பின்னர் அந்தத் தளத்தில் வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்துள்ளார் அப்துல் கலாம்.

கேரள இலக்கியத்தில் கவனிப்புக்குரிய படைப்பாளியாகவும், கேரள சட்டமன்ற உறுப்பினராகவும் மார்க்சிய அறிஞராகவும் விளங்கிய பி.கோவிந்தப்பிள்ளை, சின்னப்பாரதியின் அருமைத்தோழர். இடதுசாரித்தலைவர் இ.எம்.எஸ். நம்பூதிரிப்பாத் அவர்களை சின்னப்ப பாரதிக்கு அறிமுகப்படுத்தியவரும் கோவிந்தப்பிள்ளைதான். சின்னப்பபாரதியின் மருமகன் எதிர்பாராதவிதமாக விபத்தில் கொல்லப்பட்ட செய்தி அறிந்தவுடன் கோவிந்தப்பிள்ளை எழுதியிருந்த ஆறுதல் கடிதம் சற்று வித்தியாசமானது. ஈடுசெய்யமுடியாத இழப்புகளை தாங்கிக்கொள்வதற்கு இதுபோன்ற ஆறுதல் வார்த்தைகள் சிறந்த ஒத்தடம் என்பதால் கோவிந்தப்பிள்ளை சின்னப்ப பாரதிக்கு அனுப்பியிருந்த கடிதத்தை இங்கு பதிவுசெய்கின்றேன்.

"செய்தி அறிந்ததும் அதிர்ந்து போய்விட்டேன். நேரில் வந்து உங்களுக்கு ஆறுதல் கூறவேண்டும். வேலைப்பளுவால் முடியவில்லை. உங்கள் மருமகனின் இழப்பு உங்களுக்கு தனிப்பட்ட முறையில் பேரிழப்புத்தான். நமக்கெல்லாம் புரட்சிகரமான தத்துவம் இருக்கிறது. அது நம்மையெல்லாம் அத்துக்கத்திலிருந்து மீண்டெழத் தைரியமளிக்கும். இந்த நேரத்தில் மார்க்ஸுக்கு நிகழ்ந்த சோகத்தைக் கூறுகின்றேன். மார்க்ஸ் தனது ஒரே அன்பு மகன் காலமானது பற்றி ஆறாத்துயரில் மூழ்கியிருந்தார். அச்செல்வனுக்கு சத்துணவும், நோய்க்கான உரிய வைத்தியமும் கொடுக்கமுடியாமல் அவன் இறந்துவிட்டானே என்பதே அவரின் தாங்கமுடியாத வேதனைக்கு காரணம்."

தனது அன்புத்தோழர் ஏங்கல்ஸுக்கு எழுதும்பொழுது, "தத்துவஞானி பேகன் கூறும்பொழுது யாரெல்லாம் மக்களுக்கு தன்னலமற்ற சேவைகள் செய்துவருகிறார்களோ அவர்களுக்கு ஏற்படுகின்ற சொந்த இழப்புகளை அவர்களால் தாங்கிக்கொண்டு மீண்டெழ முடியுமென்பார்கள். நான் அப்படிப்பட்டவர்களில் ஒருவன் அல்ல. எனது மகனின் இழப்பென்பது இல்லாமையாலும், வறுமையாலும், உரிய மருத்துவம் செய்யமுடியாத கொடுமையினாலும் நிகழ்ந்துவிட்டதென்பதுதான் என்னைத்தாங்க முடியாத வேதனையில் ஆழ்த்துகிறது – என்று தெரிவித்தார். உங்களுடைய இழப்பு வறுமையால் நேர்ந்ததல்ல. விமான விபத்து மனதை தேற்றிக்கொள்ளுங்கள்" இவ்வாறு சின்னப்ப பாரதிக்கு ஆறுதல் கூறிய கோவிந்தப்பிள்ளையும் பின்னாளில் காலமாகிவிட்டார்.

அச்சமயம் 'செம்மலர்' இதழில் சின்னப்ப பாரதி கோவிந்தப்பிள்ளைக்கு அஞ்சலிக்குறிப்பு எழுதியிருக்கிறார். மனிதவாழ்வில் இழப்புகளின் வடிவங்கள் மாறுபடும். இப்போது சின்னப்ப பாரதிக்கு அஞ்சலிக்குறிப்பு எழுதுகின்றேன்.

அன்னாரின் அன்புத்துணைவியார் செல்லம்மாள் அவர்களதும், அருமை மகள்மாரினதும் துயரத்தில் பங்கேற்கின்றேன்.




## இன்றைய நாளில்...

- 1631 – மும்தாஜ் பிள்ளைப்பேற்றின் போது இறந்தார். அவரது கணவர் முகலாயப் பேரரசர் ஷாஜகான் அடுத்த 17 ஆண்டுகளுக்கு மும்தாஜுக்கான நினைவுச்சின்னமான தாஜ்மகாலைக் கட்டுவதில் முனைந்தார்.
- 1911 – செங்கோட்டை வாஞ்சிநாதன் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டு சாவடைந்தார்.
- 1944 – ஐஸ்லாந்து டென்மார்க்கிடம் இருந்து விடுதலையை அறிவித்து குடியரசானது.
- 1948 – டக்ளஸ் டிசி-6 என்ற அமெரிக்க விமானம் பென்சில்வேனியா, கார்மேல் குன்றில் மோதியதில் அனைத்து 43 பயணிகளும் கொல்லப்பட்டனர்.
- 1967 – சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டை வெற்றிகரமாகப் பரிசோதித்ததாக அறிவித்தது.
- 1985 – டிஸ்கவரி விண்ணோடத்தில் முதலாவது அரேபிய விண்வெளி வீரர் (சுல்தான் பின் சல்மான் பின் அப்துலசீஸ் அல் சவுதி) விண்வெளிக்கு சென்றார்.
- 1991 – தென்னாப்பிரிக்கர்கள் அனைவரும் பிறப்பின்போது இனவாரியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற சட்டத்தை அந்நாட்டு நாடாளுமன்றம் நிராகரித்தது.
- 2006 – மன்னார் பேசாலைப் பகுதியில் கடற்படையினருக்கும், புலிகளுக்கும் இடையிலான மோதலின் பின்னர் ஆறு பொதுமக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுத் தலைவர் தினேஷின் அறிக்கைக்கு பெரும்பாலான கட்சிகள் எதிர்ப்பு

## தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

நாடாளுமன்றத் தேர்தல்முறையை விகிதாசார முறையில் இருந்து கலப்பு முறைக்கு மாற்றும் சிபாரிசை முன்வைக்கும் தேர்தல் முறை சீர்திருத்த தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் ஒருதலைபட்ச இறுதி அறிக்கைக்கு, தெரிவுக்குழுவின் பெரும்பாலான அங்கத்தவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம். தெரிவுக்குழுவில் ஏற்படாத உடன்பாடுகளையும், உண்மைக்கு புறம்பான தகவல்களையும் உள்ளடக்கி இந்த இறுதி அறிக்கையை தெரிவுக்குழு தலைவர் சமர்ப்பித்துள்ளார். இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமானால்



அங்கும் அதை நாம் எதிர்ப்போம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த போலி அறிக்கையை ஏற்க முடியாது என தெரிவுக்குழுவில், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அறிவித்தனர். கலப்பு முறையை ஆதரிக்க முடியாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் தமக்கு தெரிவித்துள்ளதாக குழு உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவுக்குழுவில் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் கலப்பு முறைக்கு இணங்காது என நான் நம்புகிறேன். இந்நிலையில், மிக பெரும்பாலான கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு விரோதமாக இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறை சீர்திருத்தங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று (நேற்றுமுன்தினம்) தனது இறுதி அறிக்கையை குழுவில் சமர்ப்பித்தார்.

இதையடுத்து, பெரும்பாலான தெரிவுக்குழு உறுப்பினர்கள் இந்த இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அறிவித்தனர்.

இந்த குழுவில் இடம்பெறாத அதேவேளை இடம்பெற்றும் நேற்றைய (நேற்றுமுன்தினம்) கூட்டத்தில் கலந்துகொள்ளாத கட்சி பிரதிநிதிகளின் ஆதரவையும் திரட்டி சுருக்கமான மாற்று நிலைப்பாட்டை எழுத்து மூலமாக தெரிவுக்குழுவுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாற்று நிலைப்பாட்டு அறிக்கையை நண்பர் சுமந்திரன் எம்.பி. தயாரிப்பார்.

அதை அடிப்படையாகக்கொண்டு ஏனைய கட்சிகளின் ஆதரவையும் பெற்று, தெரிவுக்குழுவுக்கும், நாடாளுமன்றத்துக்கும் தேர்தல் முறைமை தொடர்பான எமது நிலைப்பாடுகளை நாம் தெரிவிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இரத்தினபுரி ஸ்ரீவிசுந்தாராம விகாரை மற்றும் நண்பர்கள் அமைப்பினால் இரத்தினபுரி நகரில் 10ஆவது தடவையாக அமைக்கப்பட்ட பொசன் வலய நிகழ்வுகள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சிவா ஸ்ரீதரராவ்)

# ஜப்பானுடனான உறவின் முக்கியத்துவத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் வலியுறுத்து



மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வின் பக்க அம்சமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜப்பானின் வெளிவிவகார பிரதி அமைச்சர், பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, கனடா, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட நிரந்தரப் பிரதிநிதிகளை சந்தித்தார்.

ஜப்பானின் வெளிவிவகாரங்களுக்கான நாடாளுமன்ற துணை அமைச்சர் மியாகே ஷிங்கோவுடனான இருதரப்பு சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மற்றும் பரஸ்பரம் ஆதரவான நட்புறவைக் குறிப்பிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஜப்பானுடனான உறவு இலங்கைக்கு இன்றியமையாதது என்பதை சுட்டிக்காட்டினார்.

பல தசாப்தங்களாக, ஜப்பான் இலங்கையின் நெருங்கிய பங்காளியாக இருந்து வருவதாகவும், குறிப்பாக திறன் அபிவிருத்தி, கணினித் தொழில்நுட்பம், ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையின் நிர்மாணம், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கான உதவிகள், மருத்துவம் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க உதவிகள், அத்துடன் இலங்கைக்கான ஜப்பானின் ஆதரவான நிலைப்பாடு போன்றவற்றில் நல்கப்பட்ட ஆதரவுகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் ஜப்பானுக்கு இலங்கை வழங்கிய ஆதரவையும் அவர் நினைவு கூர்ந்தார். டிஜிட்டல் மயமாக்கல், கார்பன் கடன் மற்றும் கடலோரப் பாதுகாப்பு, மீன்பிடி மற்றும் புவி வெப்பமடைதல் உள்ளிட்ட கடல் தொடர்பான நடவடிக்கைகளில் ஜப்பானுடனான ஒத்துழைப்பை விரிவுபடுத்த இலங்கை விரும்புவதாக அவர் சுட்டிக்காட்டினார். உலக வர்த்தக அமைப்பின் கீழ் வரும் பகுதிகளில் ஒத்துழைப்பை ஆராய்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச அரங்குகளில் இலங்கையுடனான ஒத்துழைப்பை ஆழப்படுத்தி, பலப்படுத்துவதற்கு ஜப்பானும் விரும்புவதாக ஜப்பானின் வெளிவிவகாரங்களுக்கான நாடாளுமன்ற பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70ஆவது ஆண்டு நிறைவை இலங்கையும், ஜப்பானும் கொண்டாடுவதாகவும், 100 ஆண்டு கொண்டாட்டத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இன்னும் உயர் மட்டத்திற்கு உயர்த்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் இலங்கையுடனான ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கு அவர் விருப்பம் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்காவின் தூதுவர், நிரந்தரப் பிரதிநிதி திருமதி மிஷேல் டெய்லருடன் இடம்பெற்ற சந்திப்பில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார்.

தெற்காசியா, வட ஆபிரிக்கா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய அமைச்சர் விம்பிள்டன் பிரபு அஹமத்தை வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தில் சந்தித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாடு குறித்து கலந்துரையாடினார். தற்போதைய சூழலில் பல நன்மைகளை செய்யக்கூடிய ஒரு நிறுவனமாக பொதுநலவாய அமைப்பை இலங்கை கருதுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார். நாட்டின் நிலைமை குறித்தும் அவர் அஹமத் பிரபுவிடம் விளக்கினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் இந்திராமணி பாண்டே, பிரான்ஸின் நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் ஜெரோம் பொன்னபோன்ட் மற்றும் கனடாவின் நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் லெஸ்லி இ. நார்டன் ஆகியோரையும் சந்தித்து இருதரப்பு சந்திப்புகளை மேற்கொண்டார்.

# தோட்டக் கமிட்டித் தலைவர் மீது டயகமவில் பொலிஸார் தாக்குதல்

## நீதி கோரி மக்கள் பணிப்பகிஷ்கரிப்பு



**(தலவாக்கலை செய்தியாளர்)**

பொலிஸ் உத்தியோகத்தரால் தாக்கப்பட்டவருக்கு நீதி கோரி டயகம மேற்கு மூற்றாம் பிரிவு தோட்ட மக்கள் கடந்த இரண்டு நாட்களாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

டயகம மேற்கு மூன்றாம் பிரிவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் தாக்கப்பட்டு 55 வயதுடைய எஸ். ராஜேந்திரன் என்பவர் டயகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவரும் நுவரெலியா பிரதேசசபை முன்னாள் உபதலைவருமான எஸ். சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டயகம மேற்கு மூன்றாம் பிரிவில் கடந்த 13ஆம் திகதி திங்கட்கிழமை இரவு நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட குறித்த தோட்டத்தை சேர்ந்த இரு நபர்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிவடைந்தது.

இந்த மோதலால் ஒருவர் டயகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மோதலில் ஈடுபட்டவர்களிடம் சமரசம் பேசச் சென்ற தோட்டக் கமிட்டி தலைவர் எஸ்.ராஜேந்திரன் என்பவர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக வருகை தந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் தாக்கப்பட்டு டயகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தரால் தாக்கப்பட்ட நபருக்கு நியாயமான நீதிவேண்டுமென டயகம வெஸ்ட் மூன்றாம் பிரிவு மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை வேண்டுகோள் விடுத்து பணிப் பகிஷ்கரிப்பையும் முன்னெடுத்துள்ளனர். மேலும் குறித்த பிரச்சினைக்கு நியாயம் கிடைக்காதவிடத்து சட்ட ரீதியான அனைத்து விடயங்களையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் இவ்வாறு அதிகாரத்தில் உள்ளவர்களின் அசமந்தப் போக்கினாலும் அதிகார திமிரில் ஈடுபடுவதையும் வன்மையாக கண்டிப்பதாக இ.தொ.கா. உபதலைவர் சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

## 16.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 7035 | 148 1684 |
| கனேடியன் டொலர் | 162 7608 | 175 3746 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0771 | 44 1064 |
| யூரோ | 258 3210 | 273 3033 |
| ஜப்பான் யென் | 1 5177 | 1 6281 |
| சிங்கப்பூர் டொலர் | 143 5326 | 154 2268 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 1 66 | 336 3001 |
| சுவிஸ் பிரான்ங் | 243 5154 | 26 4111 |
| ஐ.அ.டொலர் | 244 5674 | 255 3804 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 3602 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 0850 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 5521 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 0 55 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 8 77 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 86 3 |

# பெண்களை மோதிவிட்டு தப்பிச் சென்ற வாகனம்

## யாழில் சம்பவம்

***(யாழ்.செய்தியாளர்)***

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இரு பெண்களை வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், மார்ட்டின் வீதி சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பெண்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை, பின்னால் மிக வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் அவர்களை மோதி தள்ளி விட்டு, வேகமாக அங்கிருந்து தப்பியோடியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த இரு பெண்களையும் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அடுத்த சில நாட்களில் மழை பெய்யும் வாய்ப்பு

நாட்டின் தென்மேற்கு கரையோரப் பிரதேசங்களில் மழை நிலைமை அடுத்த சில நாட்களில் சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.



நாட்டில் கடந்த மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் ஆரச்சிகட்டுவவில் அமைந்துள்ள வீடு எரியூட்டப்பட்டது. அதன்பின்னரான தற்போதைய நிலைமையை நேற்று சென்று பார்வையிட்டார். (படப்பிடிப்பு: ஜூட் சமந்த)

# யாழ்.-கொழும்பு விசேட ரயில் சேவை இன்றுமுதல் ஆரம்பம்

## புகையிரத நிலைய அதிபர் பிரதீபன்



(யாழ். நிருபர்)

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் - கொழும்பு விசேட புகையிரத சேவையொன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ்ப்பாண புகையிரத நிலைய அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து கல்கிசையிலிருந்து காங்கேசன்துறைக்கு இரவு நகர் சேர் கடுகதி புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபடவுள்ளது.

இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு அம்பலங்கொட, பொல்ஹாகவல, குருநாகல், அநுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய நிலையங்களில் நிறுத்தப்பட்டு, யாழ்ப்பாணத்தை காலை 5.25க்கு வந்தடையும்.

பின்னர் அங்கிருந்து 5.30க்கு புறப்பட்டு கோண்டாவில், சுன்னாகம், காங்கேசன்துறையை சென்றடையும். மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் காங்கேசன் துறையிலிருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு சுன்னாகம், கோண்டாவில் ஊடாக இரவு 10.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, மருதானை சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசையை சென்றடையவுள்ளது.

குறித்த புகையிரதத்தின் ஒரு வழி கட்டணமாக நகர் சேர் கடுகதிக்குரிய கட்டணமாக 2ஆயிரத்து 800 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய புகையிரத நிலையங்களிலும் மேற்கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றோம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இது அமையும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# எரிபொருள் கோரி வவுனியாவில் வீதியை மறித்து போராட்டம்





(வவுனியா நிருபர்)

எரிபொருள் கோரி வவுனியாவில் ஏ-9 வீதி மற்றும் மன்னார் வீதி என்பவற்றை மறித்து நேற்று முன்தினம் (15) பிற்பகல் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.


வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் பெற்றோலுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

இதன்போது குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் முடிந்துவிட்டதாக தெரிவித்ததை யடுத்து, அப்பகுதியில் நின்ற மக்கள் ஏ-9 வீதி மற்றும் மன்னார் வீதி என்பவற்றை வழிமறித்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார், ஆர்ப்பாட் டக்காரர்களை அகற்ற முற்பட்டபோது பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. எனினும், ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் வீதியிலிருந்து அகற்றியதுடன், குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய தாங்கியில் எரிபொருள் இல்லை என்பதை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அழைத்துச் சென்று காட்டியிருந்தனர். இதனை யடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு அங்கிருந்து சென்றனர்.

# வலி. வடக்கு மக்களின் இடப்பெயர்வின் 32ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள்





(யாழ். நிருபர்)

வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வின் 32ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் (15) காலை 11 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது, வலி. வடக்கு பகுதிகள் முழுவதும் விடுவிக்கக்கோரி வழிபாடுகள் இடம்பெற்றதுடன், வழிபாட்டின் நிறைவில் சிதறுதேங்காய் அடிக்கப்பட்டது.

இந்த வழிபாடுகளில் வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கிலிருந்து அங்கிருந்த பொதுமக்கள் வெளியேற்றப்பட்டதன் 32 வருடங்கள் நேற்று முன்தினம் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி மருத்துவமனை பெண் தாதிய உத்தியோகத்தருக்கு நள்ளிரவில் அச்சுறுத்தல்

## விசாரணைகளை துரிதப்படுத்தி அறிக்கையிட உத்தரவு

(யாழ். நிருபர்)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் இரவு கடமையிலிருந்தபோது தொலைபேசியில் அச்சுறுத்தியமை தொடர்பில் இரு வேறு விசாரணைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

நிர்வாக மட்ட விசாரணையை முன்னெடுத்து அறிக்கை வழங்குமாறு வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவமனை அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சாவகச்சேரி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி மருத்துவமனையில் பணியாற்றும் பெண் தாதிய உத்தி யோகத்தர் கடந்த புதன்கிழமை 8ஆம் திகதி நள்ளிரவு கடமையில் ஈடுபட்டிருந்தபோது தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அது தொடர்பில் மருத்துவமனை அத்தியட்சகரிடம் முறையிட்ட பெண் தாதிய உத்தியோகத்தர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கியிருந்தார். சம்பவத்தையடுத்து அச்சுறுத்தியவரும், அதே மருத்துவமனையில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர் என பொலிஸ் புலன் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், உரிய விசாரணைகளை முன்னெடுத்து சம்பவம் தொடர்பில் அறிக்கையளிக்குமாறு சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகருக்கு பணித்துள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அத்துடன், பொலிஸாரும் தனியாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மன்னாரில் 300ரூபா மண்ணெண்ணெய் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் நள்ளிரவிலிருந்து காத்திருப்பு

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று வியாழக்கிழமை (16) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயை பெற்று வருகின்றனர்.குறிப்பாக, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 300 ரூபாவுக்கான மண்ணெண்ணெய்களே வழங்கப்பட்டு வருகின்றன.


மேலும், மண்ணெண்ணெய் விநியோகத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறாத வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள மன்னார் பிரதேச செயலாளரால் அப்பகுதியில் கடமையாற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவகர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடமைக்கு அழைக்கப்பட்டு அவர்களால் எரிபொருள் விநியோகம் மேற்பார்வை செய்யப்படுவதுடன் பொலிஸாரும், இராணுவத் தினரும் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் மன்னாரில் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்று வருகின்ற நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயை பெற்று வருகின்றனர்.

## கந்தப்பளை காணி ஊழல் விவகாரம்

# நுவரெலியா பிரதேச சபைத் தலைவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு




LAWYERS FOR THE JUSTICE & DEMOCRACY

(நமது மலையக செய்தியாளர்)

நுவரெலியா, கந்தப்பளையில் இடம்பெற்றுள்ள காணி ஊழல் தொடர்பில் நீதிக்கும் ஜனநாயகத்துக்குமான சட்டத்தரணிகள் அமைப்பு, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளது.

நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் இவ்விடயத்தில் நேரடியாக தொடர்புபட்டிருப்பதால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கந்தப்பளையில் நுவரெலியா பிரதேச சபைக்கென பெற்றுக்கொள்ளப்பட்ட காணி பல கோடி ரூபாவுக்கு தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் ஆதாரங்களுடன் 'தமிழன்' வார இதழ் தகவல் வெளியிட்டிருந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினரான பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் மீது அக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், பிரதேச சபைத் தலைவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஊழலுடன் தொடர்புடையோர் மீது விசாரணை நடத்துமாறும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் கந்தப்பளையில் 90 பேர்ச்சர்ஸ் காணியை முறைகேடாக பெற்றுக்கொண்டுள்ளமை தொடர்பில் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்கென கொங்கோடியா தோட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் தனியார் ஒருவரால் கடைத்தொகுதி அமைக்கப்பட்டு ஒரு கடைத்தொகுதி 35 இலட்சம் ரூபா முதல் 50 இலட்சம் ரூபா வரை விற்பனைசெய்யப்பட்டுள்ளதாகவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் காணி விடயத்தில் ஏழரை கோடி ரூபா மோசடி இடம்பெற்றுள்ளதாக நீதிக்கும் ஜனநாயகத்துக்குமான சட்டத்தரணிகள் அமைப்பு, ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

# மரக்கறி விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீயினால் கடை முற்றாக எரிந்து நாசம்

## தலவாக்கலையில் சம்பவம்





(பி.கேதீஷ், க.கிஷாந்தன்)

தலவாக்கலை நகரில் பழங்கள் மற்றும் மரக்கறி விற்பனை செய்து வந்த கடை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் கடை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தீ விபத்து நேற்று முன்தினம்(15) இரவு 10 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு பிறகே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதேவேளை குறித்த கடையின் உரிமையாளர் மற்றும் அவரின் உதவியாளர் கடையில் இல்லாதபோதே இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயினால் மரக்கறி மற்றும் பழங்கள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

எனினும், தீயினால் ஏற்பட்ட சேத விபரங்கள் கணிக்கப்படவில்லை எனவும், தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் தலவாக்கலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா பம்பரகலையில் கூப்பன் முறையில் கேஸ் விநியோகிக்க ஏற்பாடு

(செ.திவாகரன்)

நுவரெலியா பம்பரகலையில் எரிவாயு சிலிண்டர்களை கூப்பன் முறை மூலம் வழங்குவதற்கு நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஊடாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய, நுவரெலியாவில் உள்ள அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிராமசேவகர் உறுதிபடுத்தப்பட்ட முத்திரையோடு கூப்பனொன்றை வழங்கும் முறை முதற்கட்டமாக நுவரெலியா பம்பரகலையில் நேற்றுமுன்தினம்(15) கூப்பன் அட்டை வழங்கப்பட்டது.

பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து இதனை பெற்றுக்கொண்டு சென்றதை காணமுடிந்தது.

குறித்த கூப்பன் அட்டையினை அனுமதிபெற்ற எரிவாயு விற்பனை முகவரிடம் மாத்திரம் கொடுக்கும் பட்சத்தில், அவருக்கான அம்மாதத்திற்கான எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் கையளிக்கப்படும் எனவும் விநியோகம் செய்யப்படும் தினத்தில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இவ்கூப்பன் அட்டையில் அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இதன்மூலம் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க தேவையில்லை. அனைத்து குடும்பத்தினரும் மாதம் ஒரு எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தபால் உத்தியோகத்தரின் வீட்டிலிருந்து பெருந்தொகையான கடிதங்கள் மீட்பு



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

பொகவந்தலாவை தபால் நிலையத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் வீட்டிலிருந்து ஒரு தொகை கடிதங்கள் மீட்கப்பட்டுள்ளதோடு குறித்த தபால் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை(15) மாலை இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கையில், பொகவந்தலாவை கொட்டியாக்கலை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் உள்ள வீடு ஒன்றில் புகையிலை தூள் இருப்பதாக கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த உத்தியோகத்தரின் வீட்டை சோதனை இட்டபோதே ஒரு தொகை கடிதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்தார்.

பொகவந்தலாவை கொட்டியாக்கலை பகுதியில் உள்ள மக்களுக்கு பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் வந்த கடிதங்களே இவ்வாறு மீட்கப்பட்டதாகவும் இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொகவந்தலாவை கொட்டியாக்கலை கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் பொகவந்தலாவை தபால் நிலைய முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு சந்தேக நபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைபடுத்துவதற்கான நடவடிக்கையினை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.




மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் 'TINY TOT'S PRE SCHOOL' சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி பொறுப்பாசிரியை திருமதி லதா தலைமையில் நடைபெற்றது. இதன்போது, மஸ்கெலியா பிரதேச சபை பிரவன்லோ பிரிவு உறுப்பினர் ராஜ் அசோக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (செ.தி.பெருமாள்)




# அகதிகளை ருவண்டாவுக்கு நாடு கடத்தல்

# பிரிட்டனின் திட்டத்துக்கு ஐரோப்பிய நீதிமன்றம் தடை

உரிய ஆவணங்களின்றி பிரிட்டனுக்கு வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பிவைக்கும் அந்த நாட்டு அரசின் திட்டத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அதையடுத்து, அகதிகளை ஏற்றிக்கொண்டு முதன்முறையாக ருவாண்டா செல்லவிருந்த விமானம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வளமான வாழ்வாதாரத்துக்காக பிரிட்டனில் அடைக்கலம் தேடி ஏராளமானோர் வருவது தொடர்ந்து வருகிறது.

அவ்வாறு அடைக்கலம் தேடும் அகதிகளை பணத்துக்காக சட்டவிரோதக் கும்பல் ஆபத்தான முறையில் பிரிட்டனுக்கு கடத்திவரும் சம்பவங்களும் அடிக்கடி நடந்து வருகின்றன.

இந்நிலையில், தங்கள் நாட்டுக்கு உரிய ஆவணங்களின்றி அடைக்கலம் தேடி வருவோரை ருவாண்டாவுக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கும் திட்டத்தை அந்நாட்டு பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் தலைமையிலான அரசு அறிவித்திருந்தார்.

அடைக்கலம் கோரி அகதிகள் அளிக்கும் விண்ணப்பங்களை சரிபார்த்து, அவர்களுக்கு புகலிடமளிப்பது குறித்து பிரிட்டன் முடிவு செய்யும்வரை அவர்கள் ருவாண்டா தலைநகர் கிகாலியிலுள்ள தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பார்கள். அதுவரை அவர்கள் அனைவரும் சட்டவிரோத அகதிகளாகவே கருதப்படுவர். ஒவ்வொரு அகதியின் விண்ணப்பத்தையும் தனித்தனியாக சரிபார்த்து, உரிய தகுதி இருந்தால் மட்டுமே அவருக்கு அளிக்கப்படும்.




அகதிகள் நல உரிமை அமைப்பாளர்கள் மட்டும் தொழிலாளர் அமைப்பினர் இந்த திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எனினும், இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டன் உள்துறை அமைச்சர் ப்ரீத்தி பட்டேலுக்கும் ருவாண்டா வெளியுறவுத்துறை அமைச்சர் வின்சன்ட் புருட்டாவுக்கும் இடையே கடந்த ஏப்ரல் மாதம் கையொப்பமானது.

எனினும், சர்ச்சைக்குரிய அந்தத் திட்டத்தை எதிர்த்து மனித உரிமை ஆர்வலர்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இறுதியாக அந்த மனுக்களை விசாரித்த லண்டன் உயர்நீதிமன்றம், சட்டவிரோத அகதிகளை செவ்வாய்க்கிழமை (ஜூன் 14) ருவாண்டாவுக்கு அனுப்பிவைக்கும் அரசின் திட்டத்துக்கு கடந்த 10ஆம் திகதி ஒப்புதலளித்தது. அதன்படி, 7 அகதிகளை விமானம் மூலம் ருவாண்டா அனுப்ப திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், முதன்முறையாக ருவாண்டா அனுப்பப்படவுள்ள அகதிகளில் ஈராக்கைச் சேர்ந்த ஒருவருக்கு ருவாண்டாவில் மீளமுடியாத பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்து காத்திருப்பதாக அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதையடுத்து, மற்ற 6 அகதிகளும் தாங்கள் ருவாண்டா அனுப்பிவைக்கப்படுவதை எதிர்த்து மனு தாக்கல் செய்தனர். அவர்களில் சிலர் லண்டன் நீதிமன்றத்திலும் தங்களது மனுவை தாக்கல் செய்தனர். அதன் தொடர்ச்சியாக, அகதிகளை வெளியேற்றுவதற்கான ஆணை திரும்பப் பெறப்பட்டு, அவர்களை ருவாண்டா அழைத்து செல்வதாக இருந்த விமானமும் இரத்துசெய்யப்பட்டது.

**''மேன்முறையீடு செய்வோம்''**

சட்டவிரோத அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பும் திட்டத்துக்கு எதிராக ஐரோப்பிய மனித உரிமைகள் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவிருப்பதாக பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து உள்துறை அமைச்சர் ப்ரீத்தி பட்டேல் தெரிவிக்கையில்,

''சட்டவிரோத அகதிகளை ருவாண்டா அனுப்புவது தொடர்பான ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு அதிருப்தியளிக்கிறது.

எனினும், அடுத்த அகதிகள் குழுவை விமானத்தில் ருவாண்டாவுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன'' - என்றார்.

இதற்கிடையே, ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**''ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்திலிருந்து விலக வேண்டும்''**

உரிய ஆவணங்களில்லாத அகதிகளை ருவாண்டா அனுப்பும் விவகாரத்தில் ஐரோப்பிய மனித உரிமைகள் அளித்துள்ள தீர்ப்பு பிரிட்டன் எம்.பிக்களை கொந்தளிக்கச் செய்துள்ளது. அதைடுத்து, ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எண்ட்ரியா ஜென்கின்ஸ் தெரிவிக்கையில்,

''பிரிட்டன் சட்ட விவகாரங்களில் ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் தலையிடுவதை அனுமதிக்க முடியாது. எனவே, அந்த நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்பட பிரிட்டனை நிர்ப்பந்திக்கும் ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டும்'' - என்றார்.

ஏற்கனவே, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகியிலிருந்தாலும் ஐரோப்பிய மனித உரிமைகள் ஒப்பந்தத்தில் அந்த நாடு தொடர்ந்து அங்கம் வகிக்கிறது.



# குரங்கு அம்மைக்கு புதிய பெயர்

## உலக சுகாதார ஸ்தாபனம் ஆலோசனை

ஆபிரிக்காவில் காணப்பட்ட குரங்கம்மை நோய் இன்று உலகம் முழுவதும் பரவத் தொடங்கியுள்ளது. இதுவரை 39 நாடுகளில் 3,100இற்கும் மேற்பட்டோருக்கு நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன், 72 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், 29 உயிரியலாளர்கள் மற்றும் பிற ஆராய்ச்சியாளர்கள்கொண்ட குழு, கடந்த வாரம் குரங்கு அம்மை நோய்க்கு புதிய பெயர் சூட்ட வேண்டும் என பொது அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்து அவர்கள் அளித்த விளக்கத்தில்,

''குரங்கு அம்மை வைரஸ் பரவல், ஆபிரிக்காவுடன் தெளிவான தொடர்பில்லாமல் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், பிரதான ஊடகங்களில், அம்மை புண்களை சித்திரிக்க ஆபிரிக்க நோயாளிகளின் புகைப்படங்களைப் பயன்படுத்துவது பாகுபாடு மற்றும் களங்கம் ஏற்படுத்துவதாக உள்ளது'' என தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து உலக சுகாதார நிறுவனம், நிபுணர்களுடன் இணைந்து, குரங்கு அம்மை வைரஸின் பெயரை மாற்றுவது குறித்து ஆலோசனை நடத்தி வருவதாக அந்த அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, இந்த வைரஸ் தொற்று விரைவில் புதுப்பெயரில் அழைக்கப்படும் எனத் எதிர்பார்க்கப்படுகிறது.

# சீனாவை புரட்டிப் போட்ட கடும் மழை - பெருவெள்ளம்

## 5 இலட்சம் பேர் நிர்க்கதி



கிழக்கு சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் பெய்த கடும் மழையால் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குவாங்சி, குவாங்டாங் உள்ளிட்ட பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. அதிக பாதிப்புகள் ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் இரப்பர் படகுகள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர்.

உலக செய்திகள்

# டுபாய் உட்பட பெர்சிய வளைகுடாவை அடுத்தடுத்து உலுக்கிய 7 நிலநடுக்கங்கள்




ஈரானின் தெற்கே அமைந்துள்ள கிஷ் தீவில் அடுத்தடுத்து 7 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஐக்கிய இராச்சியத்தின் டுபாய் உள்ளிட்ட பெர்சிய வளைகுடா பகுதிகள் குலுங்கின.

ஹார்மோஸ் நீரிணைக்கு அருகிலுள்ள தீவில் 6 ரிச்டர் அளவில் 4 அதிர்வுகளும், 5.3 ரிச்டர் அதிர்வொன்றும் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கட்டாரிலும் 5.3 ரிச்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியாகாத நிலையில், நில நடுக்கத்தின் அதிர்வுகள் நாடு முழுவதும் உணரப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# பாலூட்டி வளர்த்த நாயை தாயெனக் கருதும் புலிகள்



தாய்ப்பாசம் என்பது அனைத்தையும் மிஞ்சக்கூடிய புனிதமானது என்பதை நாம் அறிவோம். அதை மெய்ப்பிக்கும் வகையில் புலி கூட்டத்திற்கு மத்தியில் கோல்டன் ரிட்ரீவர் இனத்தைச் சேர்ந்த நாயொன்று எந்தவித அச்சமுமின்றி உலாவுகிறது.

காரணம், இந்தப் புலிகள், குட்டிகளாக இருந்தபோது அந்த நாயிடம் பால் குடித்து வளர்ந்தவைதான். பாலூட்டி வளர்த்த அந்த நாயை அந்தப் புலிகள் தங்களது தாயாகவே கருதுகின்றன.

தாய்ப் பாசத்தில் மனிதர்களைவிட விலங்குகள் ஒருபடி மேல் என்பதுபோல் இந்தக் காட்சிகள் அமைந்துள்ளன. புலிகளுக்கு மத்தியில் தாய் நாய் வலம்வரும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருகின்றன.

# கவலைக்கிடமான நிலையில் முஷாரப்

## பாகிஸ்தானுக்கு அழைத்து வர ஏற்பாடு; குடும்பத்தினருடன் இராணுவம் ஆலோசனை



டுபாயில் கவலைக்கிடமான நிலையிலுள்ள பர்வேஸ் முஷாரப்பை, எயார் அம்பியூலன்ஸ் மூலம் பாகிஸ்தானுக்கு அழைத்து வர அந்நாட்டு இராணுவம் ஏற்பாடுகளை செய்துவருகிறது.

கடந்த 1999ஆம் ஆண்டுமுதல் 2008ஆம் ஆண்டுவரை பாகிஸ்தானை ஆட்சிசெய்த சர்வாதிகாரியான ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் (வயது 78), தேச துரோக வழக்கில் சிக்கினார். அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது மரணதண்டனை நிறுத்திவைக்கப்பட்டது. தொடர்ந்து உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த முஷாரப், டுபாயிலுள்ள மருத்துவமனையில் கடந்த 2016ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டிருந்தார்.

பல ஆண்டுகளாக சிகிச்சை பெற்றுவந்த அவருக்கு, நாளுக்கு நாள் அடுத்தடுத்த உடல் உறுப்புகள் பலவீனமடைந்து வந்தன. குணமடைந்து விடுவார் என்று எதிர்பார்த்த நிலையில், அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக, கடந்த மூன்று வாரங்களாக அவரது நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. 'அமிலாய்டோசிஸ்' என்ற நோய் அவரை பாதித்திருப்பதால், அவரை மீட்பது கடினமாக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகமும் தெரிவித்துவிட்டது.

இந்நிலையில், உயிருக்கு ஆபத்தான நிலையில் முஷாரப்பை டுபாய் மருத்துவமனையிலிருந்து பாகிஸ்தான் அழைத்து வர பாகிஸ்தான் இராணுவம் முன்வந்துள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தான் ஊடகங்களில் வெளியான செய்தியில், ''ஆபத்தான நிலையில் இருக்கும் முஷாரப்பை பாகிஸ்தானுக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக முஷாரப்பின் குடும்பத்தினரிடம் இராணுவம் பேசியுள்ளது. எயார் அம்பியூலன்ஸ் மூலம் அவரை பாகிஸ்தான் அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திகதி 15.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4787
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 8,271,840.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 1 3 2 5 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.-20,908,661.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1265
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 2,504,120.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 0 2 3 8 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.-11,834,102.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3029
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 3,940,220.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 55 61 65 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.-60,546,688.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 817
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 2,234,760.00
வெற்றி இலக்கினம் P வெற்றி இலக்கங்கள் 25 34 44 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.- 114,628,037.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0096
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.6,960,307.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 01 08 49 59
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1135
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 3,173,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.256,616,970.00
P 26 15 37 53 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# குப்பைமேடாகக் காட்சிதரும் கல்முனை பொது நூலகம்; திறன்பட இயக்க மாநகர நிர்வாகம் முன்வருமாறு மக்கள் கோரிக்கை





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை மாநகர பிரதம நூலகமாக இருந்துவரும் ஏ.ஆர்.மன்சூர் நூலகம் கவனிப்பாரற்று குப்பைமேடாக காட்சி தருகின்றது. 1977ஆம் ஆண்டுமுதல் 1994ஆம் ஆண்டுவரை கல்முனையில் உள்ளூராட்சி என்றாலும், நாடாளுமன்றம் என்றாலும் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் கண்காணிப்பிலேயே இருந்தது. 1980ஆம் ஆண்டுமுதல் 1983ஆம் ஆண்டுவரையான காலத்துக்குள் கல்முனை சந்தை, கல்முனை வாசிகசாலை என்பன கல்முனை நகரை அழகுபடுத்தி நின்றன. அதன் வெளிப்பாடாக முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த வாசிகசாலையை திறந்துவைத்தார்.

அக்காலத்தில் அந்த நூலகத்தில் மிகவும் பெறுமதியான நூல்கள் இருந்தன. இப்போது மூடைகளில் அறிவுநூல்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.மன்சூரின் சேவைகளை பாராட்டி இந்த வாசிகசாலைக்கு அவரது பெயரே வைக்கப்பட்டது.

1994ஆம் ஆண்டுமுதல் கல்முனையின் உள்ளூராட்சி, முஸ்லிம்களது விடுதலை, உரிமை, அபிவிருத்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு நிர்வகிப்பதற்கான மக்கள் ஆணையை பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிகாரம் செய்கின்றது. கடந்த 28 வருடங்களாக மக்கள் தெரிவுசெய்த உள்ளூராட்சி சபையால் அடைந்த நன்மை ஒன்றுமில்ல. ஓர் அறிவுள்ள சமூகத்தின் உயிராக விளங்கும் வாசிகசாலை கட்டடம் மாநகர நிர்வாகத்திற்காக ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதென வாசகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை முதல்வர், கல்முனை பிரதி முதல்வர், ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்றோரின் அலுவலகங்கள் அடங்கலாக கல்முனை மாநகர சபையின் நிர்வாகம் இடம்பெற்றுவரும் வளாகத்தில் அமைந்துள்ள இந்த வாசிகசாலையை கூட ஒழுங்காக நிர்வகிக்க முடியாதளவில், கல்முனை மாநகர சபை நிர்வாகம் இயங்குவதாகவும், இது தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் யாரும் கணக்கில் எடுக்காமல் இருப்பது வேதனையளிப்பதாகவும் வாசகர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக சிறந்த தீர்வை சம்பந்தப் பட்டவர்கள் உடனடியாக பெற்றுத்தருமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# சம்மாந்துறையில் வீடொன்றிலிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளை

## சந்தேக நபர்கள் மூவர் கைது

(சம்மாந்துறை, அம்பாறை நிருபர்கள்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர்ப் பகுதி வீடொன்றில் கடந்த 08ஆம் திகதி உபகரணங்கள் பல களவாடப்பட்டுள்ளதுடன், வீட்டின் உரிமையாளர் தனிப்பட்ட தேவை நிமித்தம் கொழும்பிற்கு சென்றிருந்த நிலையில், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டு நேற்று முன்தினம் (15) சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய உரிமையாளர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸாருடன் பொதுமக்கள் இணைந்து மேற்குறித்த சந்தேகநபர்கள் களவாடப்பட்ட பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நடவடிக்கையின்போது சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச்.ஜயலத்தின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி ஜனோசன் தலைமையில் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் குமாரசிங்க (25955), பொலிஸ் உத்தியோகத்தர் பரீட் (76361) உள்ளிட்ட குழுவினர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் நேற்று (16) சந்தேக நபர்கள் மூவரும் கைதாகினர்.

இவ்வாறு கைதான சந்தேகநபர்களில் 28 வயதானவர் பிரதான சந்தேகநபர் எனவும் ஏனைய



இரு சந்தேகநபர்கள் களவாடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் கைதான மூன்று சந்தேகநபர்களையும் நேற்று (16) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் அவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பின் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

# மட்டு. ஏறாவூரில் மீனவர் ஒருவர் ஆற்றுநீரில் மூழ்கி சடலமாக மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டு. ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள குடியிருப்பு ஆற்றில் தோணியொன்றில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் ஆற்றுநீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை (16) காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மயிலம்பாவெளி துரைச்சாமி வீதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை சிறீதரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வழமைபோல நேற்று முன்தினம் (15) மாலை 4 மணிக்கு வீட்டிலிருந்து வெளியேறி மீன்பிடிப்பதற்காக குறித்த ஆற்றில் தோணியில் தனியாக சென்றவர் இரவாகியும் வீடு திரும்பாததையடுத்து, உறவினர்கள் அவரை தேடிய நிலையில், நேற்று (16) காலையில் ஆற்றுநீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு



கொண்டுசெல்வதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் அச்சுறுத்தல் விடுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## கல்முனை பிரதம சுகாதார வைத்தியதிகாரி அர்சத் காரியப்பர்

(மாளிகைக்காடு நிருபர்)



முறைகேடாக விலங்குக் கழிவுகளை அகற்றுவோரை கண்காணிக்கவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் கல்முனை மாநகர சபை தயாராக இருக்கிறது. இவ்வாறான முறைகேடான கழிவகற்றல் நாசகார செயலை செய்யும் இறைச்சி கடைக்காரர்களின் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரம், வர்த்தக அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை இரத்துசெய்யவும், அவ்வாறானவர்களுக்கு இனிவரும் காலங்களில் அனுமதிப்பத்திரங்களை வழங்காமல் இருக்கவும் தீர்மானித்துள்ளோம் - என கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகளை சந்தித்துவரும் கல்முனை பிராந்திய சுகாதாரத்துறை சீர்கேடுகள் தொடர்பாக கல்முனை மாநகர சபை எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு தொடர்ந்தும் பதிலளித்த அவர், கல்முனை மாநகரத்திலுள்ள நீரோடைகள், பொது இடங்கள், வயல்வெளிகள், வீதி ஓரங்களில் விலங்குக் கழிவுகள், திண்மக்கழிவுகள் கொட்டப்பட்டு வருவதையும் அதனால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருவதையும் தொடர்ந்தும் அவதானித்து வருகிறோம். இது தொடர்பில் முக்கிய சிவில் அமைப்புகள் பலதும் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப்பும் இதுதொடர்பில் பல்வேறு அறிவித்தல்களை விடுத்திருந்தார். அவற்றையெல்லாம் கவனத்திற்கொள்ளாது பொதுமக்களின் சுகாதார மற்றும் சுற்றாடலுக்கு சவால் விடுக்கும் வேலைகளை சில நாசகாரர்கள் செய்துவருகிறார்கள். கல்முனை மாநகர சபையின் வளங்களை பயன்படுத்தி முடியுமானவரை திண்மக் கழிவகற்றலை செய்துவருகிறோம். அப்படியிருந்தும் மனிதாபிமானமில்லாது, இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற அச்ச உணர்வின்றி சிலர் செய்யும் செயலினால் ஏனைய பொதுமக்கள் தர்மசங்கடமடைகிறார்கள்.

நீரோடைகள் கரைவாகு வயற்காணி, வளஞ்சா வட்டை வயற்காணி போன்றவற்றின் பிரதான வடிச்சல் நீரோடையாகவும் அதேபோன்று காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங்களின் மழைநீர் வடிந்தோடும் வடிகாலாகவும் இருப்பதால் இந்த நீரோடையில் இயற்கைக்கு முரணாக கழிவுகளை வீசி அசுத்தப்படுத்த வேண்டாம் என பொதுமக்களை கேட்டுக்கொள்வதுடன் அவ்வாறு கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறையில் சிறுபோக அறுவடை ஆரம்பம்



(பொத்துவில் நிருபர்)

2021ஆம் ஆண்டுக்கான சிறுபோக அறுவடை ஆரம்ப நிகழ்வானது பொத்துவில் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி ஏ.எல்.நியாஸ் தலைமையில் பொத்துவில் ரெட்டை விவசாய கண்டப் பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி சுதத் கமகே, பொத்துவில் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இஸ்மாயில் பிர்னாஸ், அருகம்பை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி, உலமா, நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய



அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# உப்புவெளியில் வீதியை கடக்க முயன்ற வயோதிபர் லொறி மோதியதில் உயிரிழப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீதியை கடக்க முற்பட்டபோது, வயோதிபர் ஒருவரை லொறி மோதியதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் யார் என்பது பற்றிய விபரம் தெரியவில்லை எனவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் அறுவடைசெய்யும் சிறுபோக நெல்லின் ஒருபகுதியை மக்களுக்கு வழங்க நடவடிக்கை

## அரசாங்க அதிபர் கருணாகரன் தீர்மானம்

(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை செய்கைபண்ணப்பட்ட சிறுபோக நெல் அறுவடையின் ஒருபகுதியினை இம்மாவட்ட மக்களின் பாவனைக்கு முழுமையாக பயன்படுத்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக உணவுத் தட்டுப்பாட்டு நிலை அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனடிப்படையில் இம்மாவட்டத்தில் செய்கைபண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை அறுவடையினை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்துவதற்கான திட்டம் மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக மாவட்ட மக்கள் எதிர்வரும் ஆறு மாதகாலத்திற்கு தமக்குத் தேவையான உணவை சேமித்துக்கொள்வதற்காக குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மூடை நெல்லினை கொள்வனவுசெய்து வைத்துக்கொள்வதற்கான ஆலோசனைகளையும், ஊக்குவிப்புகளையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் ஆறுமாத காலததிற்கு மாவட்ட மக்களை உணவுப் பற்றாக்குறையிலிருந்து தக்காத்துக்கொள்வது தொடர்பாக ஆலோசிக்கும் விசேட கூட்டம் அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நேற்று (16) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இத்தீர்மானம் உயர்சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக இம்மாவட்டத்தில் நெல் அதிகளவில் உற்பத்திசெய்யப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து நெல்லினைக் கொள்வனவுசெய்து பொதுமக்களுக்கு நேரடியாக வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் தனஞ்ஜயனின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக்கூட்டத்தில், வறிய குடும்பங்கள் தமக்குத் தேவையான நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியினை கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள அமைப்புகளினூடாக வட்டியற்ற கடனடிப்படையில் வழங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளும் அரசாங்க அதிபரினால் இதன்போது வழங்கப்பட்டது.

இதுதவிர, இம்மாவட்ட மக்கள் அனைவரும் தமக்குத் தேவையான உணவுகளை பெற்றுக் கொள்வதற்காக குடும்பத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு மூடை நெல்லினை கொள்வனவு செய்துகொளவதனூடாக உணவுத் தட்டுப்பாட்டிலிருந்து தவிர்ந்துகொள்ளமுடியும் எனவும், அதிக விலையேற்றம், பதுக்கல் மாபியாக்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பொதுமக்கள் வீடுகளில் தமக்குத் தேவையான காய்கறி, பழமரக்கன்றுகளைக் கொண்ட வீட்டுத்தோட்டத்தினை செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்விசேட கூட்டத்தின்போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எல்.பிரசாந்தன், மண்முனை மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன், மாவட்ட தகவல் அதிகாரி வீ.ஜீவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்

(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பிரதேச சபைக்கான கனேடிய உதவியின் கீழ் அமுல் படுத்தப்படுகின்ற உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுப்படுத்துவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் ஆரம்ப வைபவம் பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நேற்று (16) நடைபெற்றது.

வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின்பணிப்பாளர் சபையின் உப தலைவரும், சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளருமான ஏ.எம்.எம்.நௌஸாத், உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர, உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப், சபையின் பிரதி தவிசாளர் எஸ்.யசோதரன், சபை உறுப்பினர்கள், சபையின் செயலாளர் எஸ்.நவநீதன், சபையின் சனசமூக




உத்தியோகத்தர் எம்.ஹாரூன், சபையின் உத்தியோகத்தர்கள், சனசமூக அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் கனேடிய மாநகராட்சி சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தும் கனேடிய நிதி உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் ஆளுகைக்கு தலைமை ஏற்கக்கூடிய வகையில் பெண்களை வலுவூட்டுவதற்காக அமுல்படுத்தவென திட்டமிடப்பட்டுள்ள ஆறு வருட செயற்றிட்டம் இடம்பெறவுள்ளது.

குறித்த திட்டங்களை செயற்படுத்தும் வகையில் பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் செயற்குழு உருவாக்கம் செய்யப்பட்டதுடன், வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர ஆகியோரால் திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆறு வருட செயற்றிட்டத்தின் கீழ் அகில இலங்கை ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட வாழைச்சேனை பிரதேச சபைக்கு பகுதி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள கனேடிய நிதியான 30 ஆயிரம் டொலரான இலங்கை ரூபாவாக 85 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப் தெரிவித்தார்.

அகில இலங்கைரீதியாக57 சபைகள் விண்ணப்பித்த நிலையில், 05 சபைகள் தெரிவுசெய்யப்பட்டன. அதில் வாழைச்சேனை பிரதேச சபை, கம்பளை நகர சபை, இரத்தினபுரி மாநகர சபை, மஸ்கெலிய பிரதேச சபை, நாத்தாண்டிய பிரதேச சபை ஆகிய சபைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

# இலங்கைக்கான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கேல் எப்பிள்டன் திருகோணமலை விஜயம்

## கிழக்கு மாகாண ஆளுநர், நகர சபை உறுப்பினர்களையும் சந்தித்தார்

(திருகோணமலை நிருபர்கள்)

நியூசிலாந்தின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மைக்கேல் எப்பிள்டன் திருகோணமலைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தையும் சந்தித்தார்.

குறித்த சந்திப்பு நேற்று (16) திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யக்கூடிய முக்கிய இடங்களை ஆவணப்படுத்தி, பொருளாதார மேம்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டங்கள் அடங்கிய கையேடு ஒன்றினையும் இதன்போது ஆளுநர் கையளித்தார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ.வணிகசிங்க, ஆளுநர் செயலாளர் எல்,பீ.மதநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும், தனியாருக்கு சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் திருகோணமலை சீனக்குடா விமானப் படைத்தளத்துக்கு நேற்று பிற்பகல் வந்தடைந்த நியூசிலாந்தின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மைக்கேல் எப்பிள்டன், எதிர்வரும் ஓரிரு தினங்கள் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் குறித்த பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.







இந்நிலையில், திருகோணமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் உலகப்போரின்போது உயிரிழந்த ஐந்து நியூசிலாந்து பிரஜைகளின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட 'காமன் வெல்த்' கல்லறைகளை பார்வையிட்டதுடன், திருகோணமலை நகர சபை உறுப்பினர்களையும் நகர சபை கேட்போர் கூடத்தில் சந்தித்தார்.

குறித்த சிநேகபூர்வமான சந்திப்பில் மாவட்டத்தின அரசியல், பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இவற்றில் விசேடமாக நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கேல் எப்பிள்டனினால் மாவட்டத்தின் பொருளாதாரம் தொடர்பில் வினவப்பட்டபோது திருகோணமலை மாவட்டத்தில் அடிப்படை பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய தொழில்களான மீன்பிடி, சுற்றுலா மற்றும் விவசாயம் தொடர்பில் கலந்துரையாடினார்.

மீன்பிடிக்க தேவையான எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பிலும், அதற்கான உடனடி நடவடிக்கை தொடர்பிலும், இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்ட இயற்கை உரம் பாவனை தொடர்பாகவும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலும் விவசாயிகள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், திருகோணமலை நகராட்சி மன்றத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

திருகோணமலை நகராட்சி மன்றம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பிலும் குறிப்பாக, திருகோணமலையின் மான்கள் சரணாலயம் தொடர்பிலும் மற்றும் திருகோணமலை மக்கேய்சர் விளையாட்டு மைதானம் அபிவிருத்தி இடைநடுவே கைவிடப்பட்டுள்ள நிலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் நகராட்சி மன்றம் மேற்கொள்கின்ற திட்டங்கள், திட்ட முன்மொழிவுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது..

குறித்த கலந்துரையாடலில் திருகோணமலை நகராட்சி மன்றத்தின் தவிசாளர் என்.ராஜநாயகம் நகராட்சி மன்றத்தின் உபதலைவர், செயலாளர் மற்றும் வேலை பகுதி அத்தியட்சகர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலையில் மனைவியை கொலைசெய்த கணவன் பொலிஸில் சரண்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் தனது மனைவியின் கழுத்தை நெரித்து கொலைசெய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் கணவன் சரணடைந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு, காளிகோவில் வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான 20 வயதுடைய சிவலிங்கம் கஜேந்தினி என்பவரே இவ்வாறு கணவனால் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு, காளிகோவில் வீதியிலுள்ள குறித்த இளம் கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டுள்ள சந்தேகத்தினால் இருவருக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிக்கு தனது மனைவியின கழுத்தை நெரித்து கொலைசெய்துவிட்டு, தனது இரண்டரை வயது குழந்தையை தூக்கிக்கொண்டு தனது சகோதரியின் வீட்டிற்கு கொண்டுசென்று ஒப்படைத்துவிட்டு, பொலிஸ் நிலையத்தில் பிற்பகல் 12 மணியளவில் சரணடைந்தவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் 30 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்









(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பார் வீதியில் அமைந்துள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் பெற்றோல் வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் (15) பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கிருந்து அவர்களை பொலிஸார் வெளியேற்றியதுடன், அமைதிக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரை கைதுசெய்ததையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

குறித்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னாலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகாலை 3 மணி தொடக்கம் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் தான் எரிபொருளுக்கு பணம் செலுத்தி நான்கு நாட்களாகியும் தனக்கு எரிபொருளை வழங்காது நகரிலுள்ள அடுத்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை எடுத்துச்செல்லவுள்ளதாக வரிசையில் காத்திருந்தவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் உள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் காலை 9 மணி தொடக்கம் எரிபொருளுக்காக காத்திருந்த மக்கள் ஒன்றுகூடி அங்கிருந்து எரிபொருளை எடுத்துச்செல்ல விடாததையடுத்து அங்கு பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப் பட்டு, ஆர்ப்பாட்டக்காரரிடம் குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் இதுவரை எரிபொருளுக்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பணம் செலுத்தவில்லை என தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக்கொள்ளாது ஆர்ப்பாட்டக் காரர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு, அங்கிருந்து செல்லுமாறு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர். இருந்தும் அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேறாத நிலையில், பொலிஸார் அவர்களை அடித்து துரத்தியதுடன், அமைதிக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரை கைதுசெய்ததையடுத்து அங்கு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

# களுவாஞ்சிக்குடியில் எரிபொருளைப் பெற மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் (15) மாலை பெற்றோல் வந்ததையடுத்து, பெற்றோல் நிரப்புவதற்காக மக்கள் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார்சைக்கிள்களுடன் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இந்நிலையில், அரச உத்தியோகத்தர்கள் தனியான ஒரு வரிசையில் சென்று பெற்றோல் நிரப்புவதற்கு சென்றவேளை ஏனையோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கடமையிலிருந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததையடுத்து, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.அபயவிக்ரம உடன் வருகை தந்து சிறிதுநேரம் பெற்றோல் வழங்குவது இடைநிறுத்தப்பட்டு நிலையை சுமுகமாக்கியதும், பின்னர் வரிசைக்கிரமமாக பெற்றோல் வழங்கப்பட்டது.



இந்நிலையில், களுவாஞ்சிகுடி நகரில் அமைந்துள்ள மற்றுமொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வருவதாக தெரிவித்து, அங்கும் மக்கள் தத்தமது வாகனங்களுடன் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தபோதும், நேற்று முன்தினம் இரவுவரைக்கும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வராத நிலையில் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**ஜனாதிபதியின் "கம சமகே" திட்டத்தால அறுகம்பே கடற்கரையில் குப்பைகளை தரம் பிரிக்கிற நான்கு கலரில நான்கு பெட்டிகள பொத்துவில் பிரதேச செயலாளர் வழங்கியதாக செய்தி ஒண்ட பார்த்தன்!**

**அரசாங்கமே குப்பையாக கிடக்கு எலுவா. அவங்களயும் தரம் பிரிக்கிற மாதிரி கோட்டா குப்ப, மகிந்த குப்ப, ரணில் குப்ப, நாமல் குப்ப எண்டு பெட்டிகள நாடாளுமன்றத்துக்குள ஆரும் வைத்தால் சோக்கா இருக்கும்..!**

# திருமலை ஜமாலியா வித்தியாலய புதிய அதிபராக சாலி நியமனம்



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக ஏ.ஜே.எம்.சாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் எம்.பி.எம்.சமீம், அவரது தனிப்பட்ட தேவை காரணமாக இடமாற்றம் பெற்றுச் சென்ற வெற்றிடத்திற்கு பதிலாகவே புதிய அதிபராக எம்.ஜே.எம்.சாலி (SLPS II) நியமிக்கப்பட்டு, திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் ஸ்ரீதரன் முன்னிலையில், ஜமாலியா ஜூம்ஆ பள்ளிவாசலின் மௌலவி நிம்ஸான் துஆ பிரார்த்தனையுடன் பாடசாலையில் தனது கடமையை நேற்று முன்தினம் (15) உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

குறித்த நிகழ்வில் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.எம்.மஹ்மூத், பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எஸ்.எச்.எம்.அஸத், முன்னாள் பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் எம்.பி.எம்.முஸ்தபா, முன்னாள் ஓய்வுநிலை பிரதி அதிபர் எ.எம்.எம்.பரீட், முன்னாள் பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியர் எ.எம்.எம்.ஷாஹுல் ஹமீத், முன்னாள் நகர சபை உறுப்பினர் என்.நூர் முஹம்மட், பொறியியலாளர் என்.எம்.சுகையில் மற்றும் பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர் எம்.யூஸூப் பஹ்மி ஆகியோரின் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# நுகர்வோர் அதிகாரசபையினரால் மட்டக்களப்பில் அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள் முற்றுகை

## அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பகுதியில் நுகர்வோர் அதிகார சபையினர் அரிசி விற்பனை நிலையங்கள், அரிசி ஆலைகளை நேற்று முன்தினம் (15) முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த இரு வர்த்தக நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் இதுவரை 8 அரிசி விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக நுகர்வோர் அதிகாரசபைக்கு தொடர்ச்சியாக வர்த்தக நிலையங்களில் அரிசி அரச கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் பல வியாபாரிகள் அரிசியினை பல இடங்களில் பதுக்கிவைத்துள்ளதாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்கமைய கடந்த வாரம் பல இடங்களிலுள்ள அரிசி ஆலைகள் வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்டு சோதனையில் ஈடுபட்டதுடன், அரச கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைகளுக்கு விற்பனை செய்த



8 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மட்டக்களப்பு - திருகோணமலை வீதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றை முற்றுகையிட்டபோது அங்கு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்ததையடுத்து அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து ஊறணி பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றை முற்றுகையிட்டபோது அங்கு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வதை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச கட்டுப்பாடான விலைகளில் சோற்று அரிசி 220 ரூபாவும், பச்சையரிசி 210 ரூபாவும், சம்பா அரிசி 230 ரூபாவும், கீரிசம்பா 260 ரூபாவும் ஆகும். இதற்கு அதிகமான விலைகளில் விற்பனை செய்கின்ற வியாபாரிகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் எமக்கு அறிவிக்குமாறும் இதனால் இவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவும், நீதிமன்றம் ஊடாக ஒரு இலட்சம் ரூபா தொடக்கம் 5 இலட்சம் ரூபா வரையில் தண்டப்பணம் விதிக்கவும் முடியும்.

வியாபாரிகள் அரிசியை வியாபாரத் தளத்திலிருந்து எடுத்துச்சென்று வேறு இடத்தில் பதுக்கிவைத்துள்ளதாகவும் வீடுகளில் பதுக்கி வைத்திருப்பதாகவும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, மிக விரைவில் வீடுகளில் பதுக்கி வைத்திருக்கின்ற அரிசி மூடைகளை கண்டறிந்து பதுக்கல் சட்டத்துக்கு கீழ் அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யவுள்ளோம்.

எனவே நுகர்வோர் அதிகாரசபை, வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதிக விலைக்கு விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்படுமாயின் எந்த பாரபட்சமும் பாராது மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# சிறுமி ஆயிஷா படுகொலையை தொடர்ந்து அம்பாறையில் விழிப்புணர்வு வேலைத்திட்டம்

(மாளிகைக்காடு நிருபர்)

பண்டாரகம பிரதேசத்தில் அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த 09 வயது சிறுமி பாத்திமா ஆயிஷாவின் படுகொலையைத் தொடர்ந்து பிள்ளைகளை பாதுகாப்போம் என்கிற விழிப்பூட்டல் வேலைத்திட்டம் சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பிள்ளைகளுக்கு விழிப்பூட்டல் செயலமர்வுகளை ஒன்றியம் மேற்கொள்ள தொடங்கியுள்ளது. கல்முனையில் தரம் 07, 08 மாணவர்களுக்கு ஒன்றியத்தால் நடத்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சிறப்பு விழிப்பூட்டல் கருத்தரங்கு வரவேற்பை பெற்றுள்ளது.

இதில் ஒன்றியத்தின் தலைவர் ஏ.றோஸான் முஹம்மத் வளவாளராக கலந்துகொண்டு



பேசியபோது, தற்போது நாடுபூராகவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் கூடுதலாக இடம்பெற்று வருகின்றன, படுகொலைகள்கூட இடம்பெற்றுள்ளன. தற்கொலைகளும் நடக்கின்றன. சிறுவர் சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். அதேபோல சிறுவர்கள் மிகுந்த சுய விழிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டம் அரசிடம் கிடையாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

"நாட்டில் நிலவும் கடுமையான நெருக்கடி பற்றி வாராவாரம் ஒவ்வொரு கதை கூறுவதைத் தவிர, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திட்டவட்டமான செயற்றிட்டம் அரசாங்கத்திடம் கிடையாது" - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சுமத்தியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்றுமுன்தினம் (15) சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திர தினம், வெசாக் தினம், பொசன் தினம் போன்ற தினங்களில் ரஞ்சன் ராமநாயக்க



விடுதலை செய்யப்படுவாரென அரசாங்க தரப்பு கூறியபோதிலும் கூட அது முற்றுமுழுதான பொய் மற்றும் ஏமாற்று வேலையாகும்.

எனது உயர்கல்வியின் பூர்த்தியுடன் நாட்டுக்கு வினைத்திறனுடனும் அர்த்தமுள்ள வகையிலும் சேவையாற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவேன் என்ற செய்தியை நாட்டுக்கு தெரியப்படுத்துங்களென ரஞ்சன் ராமநாயக்க என்னிடம் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி பற்றி வாராவாரம் ஒவ்வொரு கதைகள் சொல்லப்படுகின்றன. மக்களுக்கு விவரண விளக்கங்களன்றி செயற்பாடே தேவை. அரசாங்கத்தை பொறுப் பேற்றபோது, 24 மணித்தியாலங்களில் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதாக தற்போதைய பிரதமர் தெரிவித்திருந்தார்.

மக்கள் விவரண ரீதியான விளக்கங்களை எதிர்பார்க்கவில்லை. பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டையே எதிர்பார்க்கின்றனர் - என்றார்.

# பொருளாதார நிலைமை குறித்து எம்.பிக்களுக்கு பிரதமர் விளக்கம்





பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து நேற்று முன்தினம் (15) மாலை விளக்கமளித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கத்தின் குறுகிய கால மற்றும் நடுத்தர கால இலக்குகள் பற்றிய விளக்கத்தை வழங்கினார்.

அந்த விளக்கத்தைத் தொடர்ந்து, பொருளாதாரப் பேரழிவைத் தணிக்கப் பயன்படுத்தக்கூடிய சாத்தியமான வழிமுறைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நடத்தப் பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள்



யோசனைகளை முன்வைக்க அனுமதிக்கும் வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் விளக்கினார்.

எதிர்க்கட்சி சார்பில் ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, குமார் வெல்கம, ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாட் பதியுதீன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# இரு சட்டக்கோவை திருத்தச் சட்டமூலங்களுக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி







நாடாளுமன்றத்தில் அடுத்தவாரம் இரண்டாவது வாசிப்புக்கு உட்படுத்தப்படவுள்ள குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மற்றும் சிவில் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் ஆகியவற்றுக்கு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனை குழு கடந்த வாரம் அனுமதி வழங்கியது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலத்தின் ஊடாக 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைச் சட்டத்தின் 442ஆம் பிரிவு திருத்தப்படவிருப்பதுடன், வழக்குத் திறந்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் தீர்ப்பின் அல்லது பதிவேட்டின் இறுதிக் கட்டளையின் ஒரு சான்றுபடுத்தப்பட்ட பிரதியை வழங்குவதையும் இது ஏற்பாடு செய்கிறது.

குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைத் (திருத்த) சட்டமூலத்தின் ஊடாக குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் 154(அ) எனும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன், எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் விதிமுறைப்பட்டவற்றிலிருந்து குறித்த சில ஆவணங்களை விலக்களிப்பதும் இதன்மூலம் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அனுப பஸ்குவல், எம்.ஏ.சுமந்திரன், டயனா கமகே, தாரக பாலசூரிய, மயந்த திஸாநாயக உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# காரை வழிமறித்து 08 பவுண் தங்க நகைகள் கொள்ளை

*(அநுராதபுரம் செய்தியாளர் )*

எட்டரை பவுணுக்கும் அதிகமான தங்க நகை மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்த சம்பவமொன்று முறியாகடவள பகுதியில் இடம்பெற்றுள்ளதாக மொறகொட பொலிஸார் தெரிவித்தனர்.

மொறகொட பொலிஸ் பிரிவின் லபுநோருவ முறியாகடவள பகுதிலேயே இக்கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

லபுனோருவ மரதன்கடவள வீதியில் பயணித்துக்கொண்டிருந்த காரை மோட்டார்சைக்கிளில் வந்த நால்வரே வழிமறித்து தங்க நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மரதன்கடவள பகுதியைச் சேர்ந்த தம்பதியினர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய கொள்ளையர்களை கைதுசெய்வதற்காக பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி தூதுவருடன் சந்திப்பு



அரபு நாடுகளின் தூதுவர்களை சந்திக்கும் முன்னோடி ஏற்பாடுகளில் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் நேற்று முன்தினம் (15) இலங்கைக்கான சவூதி அரேபிய பதில் தூதுவர் அப்துல்லா ஓர்கோபியை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இருதரப்பு உறவுகளை பலப்படுத்தும் சந்தர்ப்பமாக இந்தக் கலந்துரையாடல் அமைந்திருந்தது.

அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கருணாசேனா ஹெட்டியாராச்சி மற்றும் சிரேஷ்ட இராஜதந்திரியான டி.எச்.ஏ.சம்சுடீன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுற்றாடல் துறையின் மேம்பாடுகளால் அடையக்கூடிய அதிகளவான நன்மைகளை அடையாளங்காணல் மற்றும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் இருநாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படல் என்பது பற்றி பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கை எதிர்கொண்டுள்ள



எரிபொருள் நெருக்கடிக்கு சவூதி ஒத்துழைக்க வேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. முறையான எரிபொருள் விநியோகம் இன்னும் இலங்கை ஹஜ்யாத்திரிகர்களுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்களையும் அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி அரேபிய தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

சவூதியில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களின் விடயங்களிலும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# நீண்ட வரிசையை மீறிய சட்டத்தரணியால் குழப்பம்

## யாழ். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதற்றம்



யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு அருகிலுள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்புவற்கு நீண்ட நேரம் பொதுமக்கள் வரிசையில் காத்திருந்த போது, வவுனியாவைச் சேர்ந்த பிரபல மூத்த சட்டத்தரணி, தான் கொழும்பு அமைச்சில் இருந்துவருவதாக பொய் கூறி எரிபொருள் நிரப்ப முற்பட்டமையை அடுத்து குழப்பம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் அதிகாலையிலிருந்து, எரிபொருள் பெறுவதற்காக பெரும்பாலானவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தபோது, குறித்த சட்டத்தரணி வரிசையை மீறி எரிபொருள் நிரப்ப முற்பட்டமையால், குழப்பநிலை ஏற்பட்டது.

நீண்ட வரிசையில் நிற்கும் வாகனங்களை தவிர்த்து, இடையில் வந்த வாகனத்திற்கு எவ்வாறு நீங்கள் எரிபொருள் நிரப்புவீர்கள் என வரிசையில் நின்றவர்கள் கேள்வி எழுப்பிய போது அவர் அமைச்சிலிருந்து வந்தவர் என ஊழியர்கள் தெரிவித்திருந்தனர்.

அதற்கு அங்கிருந்தவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தமையை அடுத்து குறித்த சட்டத்தரணி அவ்விடத்திலிருந்து தப்பியோடியுள்ளார்.

டீசலுக்காக பலரும் நீண்ட வரிசையில் காத்திருக்கும்போது, நாகரிகமின்றி , பொய் கூறி இடையில் புகுந்து எரிபொருள் நிரப்ப சட்டத்தரணி முற்பட்டமை தொடர்பில் நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருந்த மக்கள் கடும் விசனத்தை தெரிவித்திருந்தனர்.

# அரசாங்கத்தின் தவறான வரிக் கொள்கைகளே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம்

## இ.தொ.காவின் உபதலைவர் பாரத் நாவலப்பிட்டியில் தெரிவிப்பு





*(க.கிஷாந்தன்)*

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அரசின் தவறான வரிக்கொள்கைகளும் பிரதான காரணமாகும்" - என்று இ.தொ.காவின் உப தலைவரும் பிரஜா சக்தி திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.



நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிநீர்த் திட்டத்தினை திறந்துவைக்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான பாரத் அருள்சாமியின் வேண்டுக்கோளுக்கமைவாக ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் ஒரு கோடி ரூபா நன்கொடையின் கீழ் இத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

பாரத் அருள்சாமியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் தலைவர் மொகமட் அலியார், பணிப்பாளர் ரகு இந்திரகுமார் மற்றும் பொதுமக்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த குடிநீர்த் திட்டத்தின் மூலம் இப்பகுதியை சேர்ந்த 600 குடும்பங்களை உடைய ஆயிரத்து 500 பயனாளிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

30 வருடகாலமாக குடிநீர்ப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துவந்த இம்புல்பிட்டிய பிரதேச மக்களுக்கு குடிநீர்த் திட்டத்தை செய்துகொடுத்த ஹல்நூர் தொண்டு நிறுவனத்தினருக்கு பாரத் அருள்சாமி பொன்னாடை போர்த்தி ஞாபகார்த்த சின்னங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டு மக்களுக்கு இன்று ஏதேனுமொரு விடயத்துக்காக வரிசைகளில் காத்துக்கிடக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை வெகுவிரைவில் மாறி, இயல்பு நிலை திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே, மக்கள் நலன் கருதி முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் ஆதரவு வழங்கும்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் வரி வருமானம் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பாதிக்கப்பட்டது. தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

இனம், மதம், மொழி, கட்சி என பிரித்தாளும் தந்திரம் மூலம் தமது இருப்புகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசியல்வாதிகள் முற்பட்டனர். அந்த மாய வலைக்குள் மக்களும் சிக்கினர். இன்றைய பின்னடைவுக்கு மக்கள் பிரிந்து நின்றமையும் ஓர் காரணம். எனவே, நாம் இலங்கையர்களாக பயணிப்போம்.

சிறப்பான கொள்கைகளை முன்வைப்பவர்களை ஆதரிப்போம். அதனால்தான் தற்போதைய சூழ்நிலையில் இ.தொ.கா. நடுநிலை நிலைப்பாட்டை வகித்துவருகின்றது - என்றார்.

# மெல்பேர்னிலுள்ள துணைத் தூதரகத்திற்கு திறமையான சேவையை வழங்குவதற்கு ஒரு புதிய மென்பொருள் பயன்பாடு

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா, தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் தஸ்மேனியா ஆகிய மாநிலங்களிலுள்ள பெருமளவிலான இலங்கையர்களுக்கு திறமையான தூதரக சேவைகளை வழங்குவதற்காக மெல்பேர்னிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகம் டிஜிட்டல் தூதரக முகாமைத்துவ அமைப்பை நடைமுறைப்படுத்தியுள்ளது. தூதரகத்தின் செயற்பாட்டு செலவீனங்களைக் குறைப்பதற்காக தொடங்கப்பட்ட இந்த 'செயலி', சிறந்த சேவையை வழங்கி, செலவீனங்களைக் குறைக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏதுவானதாக அமைகின்றது.



சிறிய பணியாளர் தொகுதியைக் கொண்டுள்ள மெல்பேர்னிலுள்ள துணைத் தூதரகமானது, மாதத்திற்கு சுமார் 150 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள், பிறப்புப் பதிவிற்கான 50 விண்ணப்பங்கள், 100 சான்றொப்பங்கள்,100 இரட்டைக் குடியுரிமை விண்ணப்பங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றது. இந்த புதிய முறையின் மூலம், விண்ணப்பதாரர்கள் அலுவலகத்திற்குச் செல்வதற்கான முன் நியமனங்களைப் பெற முடியும். அதேவேளை, அவர்களின் விண்ணப்பங்களின் நிலையை தாங்களாகவே சரிபார்த்துக்கொள்ளவும் முடியும். இது கைமுறையாகப் பதிவுசெய்யும் பணிகளை நீக்கியுள்ளதால், விண்ணப்ப செயலாக்க நேரத்தை வெகுவாகக் குறைத்துள்ளது.

இந்த செயலி தொடங்கப்பட்டதன் மூலம், பின் அலுவலகச் செயலாக்கம் மற்றும் விண்ணப்பங்களை அனுப்புதல், அறிக்கைகளை உருவாக்குதல் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் விண்ணப்பங்களின் முன்னேற்றம் குறித்துத் தெரியப்படுத்துதல் ஆகியவை வேகமாகவும் திறமையாகவும் இடம்பெறுகின்றன. இந்த அமைப்பில் தபால் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும் அடங்கும்.

அரசாங்க கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி, இந்த மென்பொருள் செயலியை உருவாக்குவதற்காக இலங்கையின் மென்பொருள் உருவாக்குனரான லூன்ஸ் லேப் (பிரைவேட்) லிமிடெட் தெரிவுசெய்யப்பட்டதுடன், இது வெளிநாடுகளிலுள்ள எந்தவொரு இலங்கைத் தூதரகத்திலும் பயன்படுத்தப்படும் முதல் வகையாகும். துணைத் தூதுவர் கபில பொன்சேகாவின் வழிகாட்டுதலின் கீழ், இந்த கடினமான டிஜிட்டல் மாற்றத்தை சாத்தியமாக்கிய அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுடன் இணைந்து கொன்சல் டயானா பெரேராவினால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

# மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் இளம் பெண்களை குறிவைக்கும் 'லவ் ஜிஹாத்'

## தமிழக உளவுத்துறை எச்சரிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் இளம்பெண்களை கவர்ந்து நடைபெறும் மதமாற்ற திருமணங்கள் 'லவ் ஜிஹாத்தை' நோக்கி நகருவதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் தற்போதுள்ள 108 இலங்கை அகதிகள் முகாமில் சுமார் 58,843 பேர் உள்ளனர். அதேபோல் 34,135 அகதிகள் முகாமில் இல்லாமல் வெளியில் வசித்து வருகின்றனர். இது தவிர்த்து 54 இலங்கை அகதிகள் ஒடிஸாவில் வசித்து வருகின்றனர். தமிழகத்தில் மட்டும் 92,978 இலங்கை அகதிகள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமில் 450 குடும்பங்கள் வசிக்கின்றன. இதில் 450 ஆண்கள், 740 பெண்கள், 229 குழந்தைகள் என மொத்தம் 1,419 பேர் வசிக்கின்றனர். அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக புதிதாக 28 ஆண்கள், 27 பெண்கள், 28 குழந்தைகள் என மொத்தம் 83 பேர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன மோதலுக்குப் பின்... சுதந்திரத்துக்கு முன்பு ஆங்கிலேயர் முகாமாக மண்டபம் இலங்கை அகதிகள் இருந்தது. கடந்த 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சிங்கள - தமிழர்கள் இன மோதல், உள்நாட்டு போருக்குப் பின்னர் ஈழத் தமிழர்கள் கடல் வழியாக அடைக்கலம் தேடி இந்தியா நோக்கி வரத் தொடங்கினர். அப்போது, மண்டபம் முகாம், அகதிகள் இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் அகதிகள், முதலில் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டு அவர்கள் உண்மையான அகதிகள்தானா என்பதை உறுதிசெய்த பின்னர், தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இதில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து அகதிகள் வருகை முற்றிலும் குறைந்த பின்னர் மண்டபம் இடைத்தங்கல் முகாம், தற்காலிக அகதிகள் முகாமாக மாற்றப்பட்டது.



இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழகத்தில் அகதிகள் முகாம் மீதான கண்காணிப்பை பொலிஸ்துறை குறைத்துக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது தற்போது பல்வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் ஏற்பட்ட ஒரு விளைவே, தமிழக பொலிஸாரை இப்போது அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது தொடர்பாக தமிழக பொலிஸின் உள்நாட்டு பாதுகாப்புப் பிரிவு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**காதல் திருமணங்கள்**

மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் இந்துப் பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் கவர்ந்து திருமணம் செய்துகொண்டு மதம் மாற்றுவது அதிகரித்து வருகிறது. இதில் மண்டபம் அகதிகள் முகாமிலிருந்த 27 வயது இலங்கை தமிழ் இந்துப் பெண், மண்டபம் மேற்கு தெருவைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞரொருவரை கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி திருமணம் செய்துள்ளார்.

தற்போது கணவருடன் முகாமுக்கு வெளியே வசிக்கும் இந்தப் பெண், மாதந்தோறும் அகதிகள் முகாமுக்கு வந்து தனது இருப்பைப் பதிவுசெய்கிறார். மேலும் அகதிகளுக்கு வழங்கப்படும் அரசின் நிவாரண உதவிகளை அந்தப் பெண் குடும்பத்தினர் பெற்று வருகின்றனர்.

இதனால் அவரது பெயர் மண்டபம் முகாமில் அகதிகள் பதிவிலிருந்து நீக்கப்படவில்லை. ஆனால், மண்டபம் பொலிஸ் நிலையத்தில் அந்தப் பெண் காணவில்லை (Cr.no.23/2022) என வழக்குப் பதியப்பட்டுள்ளது.

இதேபோல் மண்டபம் அகதிகள் முகாமில் வசித்துவந்த மற்றொரு இலங்கை இந்துப் பெண், அங்குள்ள பாடசாலையில் பிளஸ் 2 படித்து வருகிறார். அந்தப் பெண், அண்மையில் திடீரென காணாமல்போனார். அந்தப் பெண்ணும் மண்டபம் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞரொருவரை இரண்டு ஆண்டுகளாகக் காதலித்து வந்ததாகவும், அந்த இளைஞருடன் அந்தப் பெண் சென்றிருக்கலாம் எனவும் அவரது குடும்பத்தினர் சந்தேகின்றனர்.

இது தொடர்பாக மண்டபம் பொலிஸ் நிலையத்தில், அந்தப் பெண்ணைக் காணவில்லை என (Cr.no.103/2022) வழக்குப் பதியப்பட்டுள்ளது.

**லவ் ஜிஹாத்தை நோக்கி...**

மேலும், மண்டபம் முகாமிலுள்ள இந்துப் பெண்களைக் குறிவைத்து உள்ளூர் முஸ்லிம் இளைஞர்கள் செயற்படும் இந்தப் போக்கு அதிகரித்து வருவது 'லவ் ஜிஹாத்' வடிவத்தைக் கொடுத்து, அப்பகுதியில் வகுப்புவாத பதற்றத்தை உருவாக்கக்கூடும்.

அத்துடன், முஸ்லிம்களின் ஜிஹாதி பிரிவினர் இந்தப் பகுதியை தங்களது செயல்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதைத் தடுக்க முடியாது.

எனவே, இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்திலுள்ள பிற இலங்கை அகதிகள் முகாமில் நிகழ்கின்றனவா எனக் கண்காணிக்க வேண்டும். அகதிகள் முகாமில் வசிப்பவர்களிடம் இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து விழிப்புணர்வை அரசின் பிற துறையினரோடு இணைந்து ஏற்படுத்த வேண்டும். அனைத்து அகதிகள் முகாம்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருப்பதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இரகசிய விசாரணை**

இந்த சுற்றறிக்கையின் காரணமாக தமிழகத்திலுள்ள அனைத்து இலங்கை அகதிகள் முகாம்களிலும் மாநில உளவுத் துறையினர் இரகசிய விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர். அவர்கள், முகாமுக்கு அடிக்கடி வந்துசெல்லும் நபர்கள், முகாமில் வசிக்கும் நபர்களோடு நெருங்கிய தொடர்பில் இருக்கும் வெளி நபர்கள் ஆகியோர் குறித்த தகவல்களைச் சேகரிக்கின்றனர்.

அதேபோல் முகாமை விட்டு வெளியே தங்கியிருந்து வேலை செய்யும் அகதிகளையும், அவர்களது தினசரி நடவடிக்கைகளையும், அகதிகளுடன் தொடர்பில் இருக்கும் நபர்கள் குறித்த தகவல்களையும் திரட்டி வருகின்றனர்.

ஏனெனில், இதில் சந்தேகத்துக்குரிய நபர்களை மட்டும் தங்களது கண்காணிப்பில் வைத்துக்கொள்வதற்கு உளவுத்துறை திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் மண்டபம் அகதிகள் முகாமில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் போன்று பிற முகாம்களில் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என உளவுத்துறையினர் நம்புகின்றனர்.

**'லவ் ஜிஹாத்' என்றால் என்ன?**

முஸ்லிம்கள் அல்லாத இளம் பெண்களை இஸ்லாமிய மதத்திற்கு மதமாற்றம் செய்யும் நோக்கோடு, முஸ்லிம் இளைஞர்கள் போலியாக காதல் செய்து திருமணம் செய்துகொள்வதே 'லவ் ஜிஹாத்' என்று அழைக்கப்படுகிறது.

இதில் 'லவ் ஜிஹாத்' முறையில் பிற மதப் பெண்களை காதலித்து திருமணம் செய்யும் இளைஞர்கள், பின்னர் அவர்களை சமூகவிரோதச் செயல்களுக்குப் பயன்படுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன,

பாரதீய ஜனதா கட்சி ஆளும் உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியானா, கர்நாடகம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் லவ் ஜிஹாத்தை தடுக்க சிறப்புச் சட்டங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அண்டை மாநிலமான கேரளத்தில் 'லவ் ஜிஹாத்' காதல் திருமணங்கள் அதிகமாக நடைபெறுவதாக முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், கேரள மாநிலத்தை ஆளும் மார்க்சிஸ்ட் கட்சியோ அது தவறான பிரசாரம் எனக் கூறி வருகிறது.

## "நோ மாஸ்க் - நோ எண்ட்ரி"


# சென்னை விமான நிலையத்தில் மீண்டும் கொரோனா விதிமுறைகள் அமுல்

இந்திய செய்திகள்

சென்னை விமான நிலையத்தில் கொரோனா பாதுகாப்பு விதிமுறைகள் மீண்டும் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு அதிகமாகி வருவதால் சென்னை விமான நிலையத்திற்கு வரக்கூடியவர்களுக்கு முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பயணிகள் முகக்கவசம் அணியாமல இருந்தால் விமானத்தில் ஏற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் அனைத்து பகுதிகளிலும் "நோ மாஸ்க், நோ எண்ட்ரி" என்ற ஸ்ரிக்கர்கள் அதிகமாக ஒட்டப்பட்டுள்ளன.



**12 ஆயிரத்தைத் தாண்டிய ஒருநாள் கொரோனா தொற்று**

இதேவேளை, இந்தியாவில் சுமார் மூன்று மாதங்களுக்குப் பின்னர், ஒரு நாள் கொரோனா தொற்று 12 ஆயிரத்தை எட்டியுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் புதிதாக 12,213 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ள நிலையில், நோய்த் தொற்றுக்கு 11 பேர் உயிரிழந்துள்ளனர்.



## தனக்குத்தானே கல்லறை கட்டி காத்திருந்த மூதாட்டி

இறந்த பின்னர் தன்னை அடக்கம் செய்ய யாரும் இல்லை என்பதால் தனக்குத்தானே கல்லறை கட்டி காத்திருந்த ஆதரவற்ற மூதாட்டி ஒருவர் உயிரிழந்த நிலையில், ஒருவாரமாக வீட்டில் கேட்பாரற்ற சடலமாக கிடந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு அருகே பல்லுளி பகுதியைச் சேர்ந்த 66 வயது ஆதரவற்ற மூதாட்டி ரோஸி. இந்த மூதாட்டிக்கு உறவினர்கள் என்று சொல்லிக்கொள்ள எவரும் இல்லாமல் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

ஆரம்பத்தில் வீட்டு வேலைகள் செய்துவந்த இவர், பின்னாட்களில் ஊராட்சி சார்பில் வழங்கக்கூடிய 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் வேலைக்கு சென்று ஒருநாள் கூட விடுமுறை எடுக்காமல் வேலை செய்து வந்துள்ளார். இதனை பாராட்டி ஊராட்சி மன்றத் தலைவர் இரண்டு முறை கௌரவித்துள்ளார்.

அப்படி வேலைக்கு செல்லும் இடங்களில் உடன் பணி புரிபவர்கள் நீ இறந்தால் உன்னை அடக்கம் செய்ய யார் இருக்கிறார்கள் என கேட்டு கிண்டல் செய்துள்ளனர்.

இதனால் மனமுடைந்த காணப்பட்ட ரோஸி, தான் இறந்தால் தன்னை அடக்கம் செய்ய ஊராட்சி நிர்வாகத்திடம் அனுமதிபெற்று தான் வேலை செய்து சம்பாதித்து வைத்திருந்த ஐம்பதாயிரம் ரூபா பணத்தில் தனக்கென்று ஓர் அழகான கல்லறையை கட்டி வைத்திருந்தார்.

அந்தக் கல்லறையின் பின்புறத்தில் ஒரு வாயில் வைத்து அதன் வழியாக உடலை உள்ளே தள்ளி அடக்கம் செய்யும் விதத்தில் அந்த கல்லறை வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், உடல்நலக்குறைவால் அவதிப்பட்ட ரோஸி பாட்டி கடந்த ஒரு வாரமாக வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். கவனிக்க யாரும் இல்லாத நிலையில் வீட்டிலேயே உயிரிழந்து கிடந்துள்ளார்.

ஒரு வாரமாக வீட்டின் வெளியே ரோஸியை காணாமல் சந்தேகமடைந்த அந்த பகுதியைச் சேர்ந்த ஒருவர் வீட்டிற்குள் சென்று பார்த்துள்ளார். அப்போது அவர் உடல் அழுகிய நிலையில் கேட்பாரற்று கிடந்துள்ளார். இதனையடுத்து அவர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார். பொலிஸார் ரோசியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

ரோஸி பாட்டியின் உடல் பிரேத பரிசோதனை முடிந்து அவர் கட்டி வைத்திருக்கும் கல்லறையில் அடக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கேலி கிண்டல்களால் மனம் நொந்து உயிரோடு இருக்கும்போதே தனக்கு கல்லறை கட்டி காத்திருந்த மூதாட்டி கேட்பாரின்றி இறந்து கிடந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

'தளபதி 67' அப்டேட்

## இது ரொம்ப பழசா இருக்கே!



வம்சி இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்துவரும் 'தளபதி 67' படத்தின் தலைப்பு குறித்து தகவலொன்று பரவிவருகிறது.

நடிகர் விஜய் நடிப்பில் கடைசியாக வெளியான பீஸ்ட் திரைப்படம் ரசிகர்களைப் பெரிதாக கவரவில்லை. இதன் காரணமாக விஜய் தற்போது நடித்துவரும் தளபதி 66 படத்தை ரசிகர்கள் மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

தெலுங்கு இயக்குநர் வம்சி இயக்கும் இந்தப் படம் குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகிவருகிறது. இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார். தமன் இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார்.

இந்தப் படத்தில் சரத்குமார், பிரபு, ஜெய சுதா, ஸ்ரீகாந்த், ஷாம், யோகிபாபு, பிரகாஷ் ராஜ், குஷ்பு, சங்கீதா, சம்யுக்தா உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துவருகின்றனர். மகேஷ் பாபு இந்தப் படத்தில் சிறப்பு வேடத்தில் நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்தப் படத்துக்கு 'வாரிசு' அல்லது 'வெறித்தனம்' எனப் பெயரிடப் பட்டுள்ளதாக தகவல் பரவி வருகிறது. இந்தத் தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், வாரிசு என்ற தலைப்பு மிகவும் பழைய பாணியில் இருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்துவருகின்றனர்.

# 'அக்னி பாதை' திட்ட எதிர்ப்பு; வன்முறையால் பற்றி எரியும் பீஹார்

## பயணிகள் ரயில் பெட்டிக்கு தீவைப்பு





இந்திய இராணுவத்தில் 4 ஆண்டுகள் மட்டுமே பணிபுரியும் வகையில் புதிய ஆட்சேர்ப்பு முறையை அறிவித்த மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பீஹாரில் நடந்த போராட்டங்கள் வன்முறையாக வெடித்துள்ளன. இந்நிலையில், சரான் மாவட்டம் சப்ரா எனும் பகுதியில் பயணிகள் ரயில் பெட்டிக்கு தீவைக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாநிலம் முழுவதுமே வீதி மறியல் நடைபெறுகிறது. அரா, பாகல்பூர், அர்வால், பக்சார், கயா, மூங்கர், நவாடா, சஹர்சா, சிவான் மற்றும் அவுரங்காபாத் மாவட்டங்களில் போராட்டம் வலுத்துள்ளது.

பீஹாரின் பக்சார் மாவட்டத்தில் ரயில் நிலையத்தில் திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தண்டவாளத்தில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் பாட்னா நோக்கிச் செல்லவேண்டிய ஜன் சதாப்தி ரயில் 30 நிமிடங்கள் தாமதமாக பயணித்தன.

பீஹாரில் 8 மாவட்டங்களில் பதற்றமான சூழல் நிலவுகிறது. டில்லி, உத்தரப்பிரதேசம், ஹரியானா மாநிலங்களிலும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

**கண்ணீர்ப்புகை குண்டை பயன்படுத்தும் காவலர்**

இராணுவம், கடற்படை, விமானப் படையில் 4 ஆண்டுகள் சேவையாற்ற வகை செய்யும் 'அக்னி பாதை' என்ற புதிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி, 17.5 முதல் 21 வயதுடைய இளைஞர்களும் இளம்பெண்களும் முப்படைகளில் சேரலாம். புதிய திட்டத்தில் பணியில் சேருவோர், அக்னி வீரர்கள் என்று அழைக்கப்படுவர்.

அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் 4 ஆண்டுகள் சேவையாற்ற வேண்டும். அக்னி வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாது. ஆனால், உயிரிழப்பு ஏற்பட்டால் கூடுதலாக ரூ.44 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். பணியின்போது காயமடைந்து 100 சதவீத மாற்றுத்திறனாளியானால் ரூ. 44 இலட்சம், 75 சதவீதத்துக்கு ரூ. 25 லட்சம் 50 சதவீதத்துக்கு ரூ. 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய அணியின் தலைவரான ஹார்திக் பாண்ட்யா



அயர்லாந்து அணிக்கு எதிரான 2 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட நிலையில், அணியின் தலைவராக சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா நியமிக்கப்பட்டுள்ளார்.

அயர்லாந்து அணியுடனான போட்டிகள், ஜூன் 26 மற்றும் 28 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. அயர்லாந்து தொடர் முடிந்தவுடன் இங்கிலாந்து புறப்படும் இந்திய அணி 3 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது. மேலும், கொரோனா தொற்று காரணமாக இங்கிலாந்துக்கு எதிராக ஒரு டெஸ்ட் போட்டி தள்ளிவைக்கப்பட்டிருந்தது. அந்த டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி விளையாடவுள்ளது.

**அயர்லாந்து தொடருக்கான இந்திய அணி**

ஹார்திக் பாண்ட்யா (தலைவர்), தினேஷ் கார்த்திக், இஷான் கிஷன், ருதுராஜ் கெய்க்வாட், சஞ்சு சாம்சன், சுர்யகுமார் யாதவ், வெங்கடேஷ் ஐயர், தீபக் ஹூடா, புவனேஷ்வர் குமார், ராகுல் திரிபாதி, யுஸ்வேந்திர சஹால், அக்சர் படேல், ரவி பிஷ்னோய், ஹர்ஷல் படேல், ஆவேஷ் கான், அர்ஷ்தீப் சிங், உம்ரான் மாலிக்.

# நியூசிலாந்தின் போராட்டம் வீணானது

## இறுதி அணியாக உலகக்கிண்ணத்துக்குள் நுழைந்த கோஸ்டாரிகா




கட்டாரில் இந்தாண்டு இறுதியில் நடைபெறவுள்ள 2022 பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரின் தகுதி சுற்று ஆட்டத்தில் கோஸ்டாரிகா அணி 1-0 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வீழ்த்தி 32ஆவது அணியாக உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றது.

32 அணிகள் பங்கேற்கும் பீபா உலகக் கிண்ணத் தொடர் நவம்பர் 21ஆம் திகதிமுதல் டிசம்பர் 18ஆம் திகதிவரை நடைபெறுகிறது. இதற்கான கடைசி தகுதிச் சுற்று 'பிளே-ஓவ்' ஆட்டம் கட்டார் தலைநகர் டோஹாவில் நேற்று முன்தினம் இரவு அரங்கேறியது. இதில் கோஸ்டாரிகா - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 3ஆவது நிமிடத்தில் கோஸ்டாரிகா வீரர் ஜோயல் கேம்ப்பெல் கோல் அடித்ததால் அந்த அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இறுதிவரையும் நியூசிலாந்து அணி வீரர்கள் கோலடிக்க முயன்றாலும் அது முடியவில்லை. இறுதியில் மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிகா 1-0 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி 32ஆவது அணியாக அடியெடுத்து வைத்தது. ஒட்டுமொத்தத்தில் 6ஆவது முறையாக உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றிருக்கும் அந்த அணி தொடர்ச்சியாக 3ஆவது முறையாக நுழைந்துள்ளது.




உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்ற 32 அணிகளின் பட்டியல்

கடைசியாக 2010ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றிருந்த நியூசிலாந்து அணி அதன் பிறகு தொடர்ந்து 3ஆவது முறையாக பிளே-ஓவ் ஆட்டத்தில் தோல்வியடைந்து உலகக்கிண்ண வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு அனுமதி!

ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பு காரணமாக விளையாட்டுலகில் அனைத்து துறைகளிலும் ரஷ்யாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா தொடுத்துள்ள போர் 100ஆவது நாளை கடந்து நடைபெற்று வருகிறது. ரஷ்யா தொடுத்துள்ள போர் காரணமாக பல நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. அதைத் தொடர்ந்து பல நாடுகளின் விளையாட்டு கூட்டமைப்புகளும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

குறிப்பாக, டென்னிஸ் அரங்கில் புகழ்பெற்ற விம்பிள்டன் தொடரில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ் வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் தொடர் இந்த மாத இறுதியில் தொடங்கவிருக்கிறது. அதைத் தொடர்ந்து அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி ஓகஸ்ட் மாத இறுதியில் தொடங்கவிருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டு வீரர்கள் பங்கேற்க அமெரிக்க டென்னிஸ் கூட்டமைப்பு தற்போது அனுமதி வழங்கியுள்ளது. இதனால் கடந்த முறை அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் பட்டம் வென்ற ரஷ்யாவின் டேனில் மெட்வதேவ் மீண்டும் ஒருமுறை தனது பட்டத்தை தக்கவைத்துக்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது.









# ஜமாலியா அணி சம்பியனாக தெரிவு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 100ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிகள் அண்மையில் திருகோணமலை ஏகாம்பரம் மைதானத்தில் நடைபெற்றன.

இறுதிப் போட்டியில் பிக் புட் விளையாட்டுக் கழகமும், ஜமாலியா விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் ஜமாலியா அணி 3-0 என்ற அடிப்படையில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. சம்பியன் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும், கிண்ணமும், இரண்டாம் இடம்பெற்ற அணிக்கு 25 ஆயிரம் ரூபா பணமும், கிண்ணமும் வழங்கப்பட்டன.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம பணப்பரிசிலையும், கிண்ணங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் பொலிஸ் அதிகாரி, விளையாட்டு அதிகாரிகள் உட்பட விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# சாதனையுடன் தொடரை வென்றும் இங்கிலாந்துக்கு பின்னடைவு

பென் ஸ்டோக்ஸ் தலைமை இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரை 2-0 என்று வெற்றிபெற்றும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 8ஆம் இடத்தில் இருக்கிறது. தாமதமாக ஓவர்கள் வீசியதால் 2 புள்ளிகளையும் இழந்துள்ளதோடு, 40 சதவீத அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.



இரண்டு ஓவர்கள் இங்கிலாந்து குறைவாக வீசியதால் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் 2ஐ இழந்தது. இப்போது ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி அட்டவணையில் 8ஆம் இடத்தில் உள்ளனது. இதனால் புள்ளிகள் சதவீதமும் 25 சதவீதத்திலிருந்து 23.80 சதவீதமாகக் குறைந்துள்ளது. உண்மையில் 42 புள்ளிகள் என்று இருக்கவேண்டியது மெதுவான ஓவர் ரேட்டினால் 40 புள்ளிகளாக உள்ளது.

வீரர்கள் மற்றும் வீரர் ஆதரவுப் பணியாளர்களுக்கான ஐ.சி.சி. நடத்தை விதி 2.22இன்படி, இங்கிலாந்து வீரர்களுக்கு ஸ்லோ ஓவர் வீதத்திற்காக அவர்களது போட்டிக் கட்டணத்தில் 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் பந்துவீசத் தவறிய அணி வீரர்கள் ஒவ்வொரு ஓவருக்கும் போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்படும்.

# துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிய இலங்கை அணி



சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி நேற்று கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. முதல் போட்டியில் இலங்கை அணி போராடி தோல்வியை தழுவிய நிலையில் 2ஆவது போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் இலங்கை அணி களமிறங்கியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. முதல் போட்டியில் கிடைத்த சீரான ஆரம்பம் இரண்டாவது போட்டியில் கிடைக்கவில்லை. பெத்தும் நிஸங்க 14 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து தனுஷ்க குணதிலக்க 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 35 ஓட்டங்களுக்கு ஆரம்ப ஜோடியை இழந்தது.

அடுத்து தனஞ்ஜய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோருக்கிடையில் இணைப்பாட்டமாக 61 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் தனஞ்ஜய டி சில்வா ஆட்டமிழக்க, அடுத்து குசல் மெண்டிஸூம் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 47.4 ஓவர்கள் நிறைவுக்கு வந்த நிலையில் மைதானத்தில் மழை குறுக்கிட்டது. பத்திரிகை அச்சுக்கு செல்லும் வேளையில் 47.4 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 220 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இலங்கை அணியில் முக்கிய சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்க முதல் போட்டியில் உபாதைக்குள்ளானதன் காரணமாக இரண்டாவது போட்டியில் களமிறங்கவில்லை. அவருக்கு பதிலாக மற்றுமொரு சுழற்பந்து வீச்சாளரான ஜெப்ரி வெண்டர்ஸே களமிறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

# மாகாண மட்ட போட்டிக்கு தெரிவான மன்னார் உயிர்த்தராசன்குளம் மாணவர்கள்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கான 2022ஆம் ஆண்டுக்கான வலயமட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டி மன்/முருங்கன் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற நிலையில் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் இருவர் இரண்டாம் இடத்தை பெற்று மாகாண மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.



குறித்த வலயமட்ட மெய்வல்லுனர் போட்டியில் 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு, உயரம் பாய்தல் போட்டியில் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களான ஏ. ஆகாஷ், எஸ். விஜய் ஆகியோர் 2ம் இடத்தை பெற்று மாகாண மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

நீண்டகாலத்திற்கு பின்னர் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க. பாடசாலையிலிருந்து மாகாணமட்ட போட்டிக்கு இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7